Registered as a News Paper in Sri Lanka

கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNOTTAM

வெளியீடு:-51 ஏப்ரல் April 2009 விலை: 10.00

அழிவின் நரகத்திலிருந்து
சுதந்திரத்திற்கான
சிறகுகளை விரிப்போம்

வன்முறை கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி. ஜனநாயகம், அதிகாரப்பகிர்வு

புலிகளின் பாசிசம் முடிவுக்கு கொண்டுவரப்படும் சூழ்நிலையில் புலிகளைப் போன்றும் அவர்களின் பிரதி விம்பங்களாகவும் காணப்படும் வன்முறை கலாச்சாரம் எமது சமூகத்தில் முற்று முழுதாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் இந்த வன்முறை வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு மட்டங்களில் பரவலாக காணப்படுகின்றன.

திருமலையில் ஆறு வயது சிறுமி கொடுமையாக படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் அதில் சம்பந்தப்பட்டதாக கைது செய்யப்பட்ட வரதராஜா ஜனார்த்தனன் புலிகளின் பாணியிலேயே சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டதை நாம் இங்கு உதாரணமாக சொல்ல முடியும்.

இவ்வாறு பல நூற்றுக்கணக்கான சம்பவங்கள் எமது சமூகத்தில் நிகழ்கின்றன.. இந்த வன்முறை கலாச்சாரத்தினால் இன்று லட்சக்கணக்கான மக்கள் வன்னியில் யுத்த நரகத்தில் பணயம் வைக்கப்பட்டிருப்பதை நாம் இங்கு விஸ்தாரமான உதாரணமாக கொள்ள முடியும்.

யுத்த சூழலில் இருந்து தப்பிச் செல்ல விரும்பும் மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வது, சித்திரவதை செய்வது, நாளும் பொழுதும் இளைஞர்களையும் யுவதிகளையும், சிறுவர்களையும் யுத்தத் தேவைகளுக்காக அணி திரட்டுவது- அவர்களை மொட்டையடிப்பது, பங்கர்களில் சிறை வைப்பது, சிறுவர்களை தற்கொலை குண்டுதாரிகளாக மாற்றி பெரும் மனித அழிவுகளை ஏற்படுத்துவது எல்லாம் ஒரே நச்சு விருட்சத்தின் பல்வேறு கிளைகளே.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில ஆங்காங்கே கடத்தல் சம்பவங்களும், படுகொலை சம்பவங்களும், கப்பம் பெறுதலும், மர்மமான வங்கிக் கணக்குகளுக்கு பணம் அனுப்புமாறு பலவந்தப்படுத்துவதும் இன்று சாதாரண அன்றாட நடைமுறைகளாகி வருகின்றன.

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் சமூக வாழ்வும், அரசியலும் முற்று முழுதாக ஜனநாயகமயப்படுத்தப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஜனநாயக அரசியல் கோட்பாடுகளும் மனித விழுமியங்களும் முன்னிறுத்தப்பட வேண்டிய முதன்மைப்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

தமிழ் மக்களின் அரசியல் கட்சிகள் ஜனநாயக வழியில செயற்படுவதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அதற்குரிய கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். மக்கள் பிரச்சனைகளை எதிர்நோக்கும் இடங்களுக்கு ஜனநாயக அரசியல் கட்சிகளும், சமூக விழிப்புணர்வு குழுக்களும் சென்று வருவதற்கான, மக்களின் இன்ப துன்பங்களில் பங்குபற்றுவதற்கான அவர்களின் தேவைகளை கண்டறிவதற்கான அவற்றிற்கு நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும் சட்டம், ஒழுங்கு சீரான முறையில் பேணப்படல் வேண்டும்.

புலிகளின் வனமுறை மனநோயின் சாயல், ஏக பிரதிநிதித்துவ அகங்காரத்தின் சாயல் வெவ்வேறு தரப்பினரிடம் காணப்படுகிறது. இதுவொரு தொற்று வியாதியும் கூட.

வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்ட அரசியல் கட்சிகள சுதந்திரமாகவும், நாகரீகமாகவும். தமது கருத்துக்களை வெளிப்படுத்தவும், செயற்படுவதற்குமான சூழல் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

துப்பாக்கிகளின் அதிகாரத்துக்கப்பால் மக்களின் ஜனநாயக உரிமைகள முக்கியமானவை. மக்களின் மனச்சாட்சியின் குரல் ஏகபிரதிநிதித்துவ அகங்காரத்தால் நசுக்கப்பட்டது.

அது வெவ்வேறு வடிவங்களில் பிஸ்டல் குழுக்களாக, இனந்தெரியாத கொலைகளாக, கடத்தல்களாக எமது சமூகத்தில் இனிமேலும் தொடர அனுமதிக்க முடியாது.

(தொடர்ச்சி 02ம் பக்கம்...)

கந்தன் கருணை படுகொலை 22வது ஆண்டை நினைவு கூருவோம்!



ஈழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டதற்காக சமூக விரோதிகள் என்றும், தேசவிரோதிகள் என்றும் புலிகளால் முத்திரை குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்கள் பல்லாயிரம். புலிகளின் அந்த துரோக வரலாற்றில் யாழ் கந்தன் கருணை இல்லத்தில் புலிகளால் சிறை பிடித்து வைக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ இயக்கங்களைச் சேர்ந்த 57 பேர் 1987 மார்ச் 30 இல் ஈவிரக்கமின்றி கொன்றொழிக்கப்பட்டார்கள்.

மானிடத்தின் மகத்தான கனவுகளுடன் போராட புறப்பட்டவர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டார்கள். இது ஒரு கறைபடிந்த அத்தியாயம்.

(தொடர்ச்சி 03ம் பக்கம்...)

அப்பாவி மக்களை பாதுகாக்க வேண்டிய புனிதமான கடப்பாடு அரசுக்கு உண்டு

த.வி.கூ தலைவர் ஜனாதிபதிக்கு கடிதம்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அகப்பட்டு வாழும அப்பாவி மக்கள் மத்தியில் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கடந்த இரண்டு மூன்று வாரங்களுக்குள் திடீரென உயர்ந்துள்ளமையை மிக அக்கறையுடனும் மிகுந்த துன்பத்துடனும் தங்கள் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன். இராணுவம் வன்னிக்குள் புகுந்ததில் இருந்து, இன்று ஏற்பட்டுள்ள நிலை மிக அதிகப்படியாக உயர்ந்துள்ளது. நான் இரு சமூகங்களுக்கிடையில் எதுவித பேதமும் காணாதவன் என்பதை தாங்கள் அறிவீர்கள் ஒரு தமிழராக இருந்தாலும்ஓர் சிங்களவராக இருந்தாலும், ஒரு இஸ்லாமியராக இருந்தாலும் அவர்களின் உயிர் மிகப் பெறுமதியானவையாகும். இன்றுள்ள யுத்த நிலைமையில் இராணுவம் பதிலடி கொடாது தொடர்ந்து தாக்கத்தை சகிக்க வேண்டுமென நான் எதிர்பார்க்கவில்லை. இராணுவத்தினர் தம் தாய் நாட்டை காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் அதற்கு மாறாக விடுதலைப் புலிகளோ ஏறக்குறைய யுத்தத்தில் தோன்றுபோன நிலையிலும் ஆணவம் கொண்ட தமது தலைவனின் பணிப்பின் பேரில் போராடுகின்றனர். தாம் பலாத்காரமாக தம் பாதுகாப்புக்காக பிடித்து வைத்துள்ள பொதுமக்களின் பாதுகாப்புப் பற்றி யோசிக்காது எதுவித கேள்வியும் கேட்காது போராடி மடிவதே அவர்களின் கடமையாகும்.

ஆனால் ஜனாதிபதி அவர்களே எப்படியும் தங்களின் அரசுக்கு அப்பாவி மக்களை பாதுகாக்க வேண்டிய புனிதமான கடப்பாடு உண்டு. விடுதலைப் புலிகள் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரதேசத்தினையும் மக்களின் பெரும் பகுதியினரையும் மீட்டெடுத்த பெருமை இராணுவத்தினருக்கு உண்டு. இராணுவத்தில் இதுவரை காலமும் பல தோழர்களை பலிகொடுத்து சம்பாதித்த நற்பெயருக்கு பல அப்பாவி மக்களின் இழப்பால் களங்கம் ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை மாற்றம் பற்றி நான் நன்கறிவேன். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் பெருமளவில் குறுகியுள்ளமையால் ஏற்பட்ட இடநெருக்கம் பெருமளவாக பாதிப்புக்கள் ஏற்ப[illegible] விரைவில் முடிக்க வேண்டுமென

(தொடர்ச்சி 06ம் பக்கம்...)

தமிழ் முஸ்லீம் கட்சிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு

26-03-2009 இல் சமகால நிலைமைகள் பற்றி ஆராய ஜனாதிபதி சிறுபான்மை மக்களின் கட்சிகளை அழைத்திருந்தார்.

இக் கூட்டத்தில் பிரதானமாக வன்னியில் மனித கேடயங்களாக வைக்கப்பட்டிருகும் மக்களின் நிலை குறித்து பேசப்பட்டது. எவ்வளவு தொகையினர் அங்கு அகப்பட்டிருக்கிறார்கள் என்பதில் வெவ்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. எனினும் ஒன்றிலிருந்து ஒன்றரை லட்சம் மக்கள் வரையில் அங்கு இருக்கலாம் என ஊகம் தெரிவிக்கப்பட்டது.

(தொடர்ச்சி 11ம் பக்கம்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்

Kannottam

எமது கண்ணீருக்கும் ரத்தத்திற்கும் விலையுண்டு

இன்று உலகளாவிய அளவில் மானிட நெஞ்சங்களை உலுக்கிக் கொண்டிருக்கும் மனிதாயிமானப் பிரச்சனை வன்னியில் மனித கேடயங்களாக வைக்கப்பட்டிருக்கும் ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் பற்றியதாகும்.

இலங்கையிலும், இந்தியாவிலும், உலகளாவியளவிலும் இந்த மானிட நெருக்கடி பெரும் உணர்வலைகளையும் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

ஐநா வின் செயலாளர் நாயகம், ஐநாவின் மனித உரிமை ஆணையகம், பாதுகாப்புச் சபை, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்திரேலியா, இந்தியா–தமிழகம், சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை கண்காணிப்பகம் என சகல இடங்களில் இருந்தும் வன்னி மக்கள் எதிர்நோக்கும் மனிதாயிமான நெருக்கடிகள் பற்றிய கரிசனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சாரம்சமாக புலிகளால் மனித கேடயங்களாக வைக்கப்பட்டிருக்கும் மக்கள் விடுவிக்கப்பட வேண்டும், மக்கள் வாழும் பாதுகாப்பு வலயங்களில் குண்டுகள் விழுவது நாள்தோறும் டசின் கணக்கானவர்கள் மரணிப்பது அதிலும், சிறார்களும், பெண்களும் பாதிக்கப்படுவது, தப்பிச்செல்லும் மக்கள் மீது புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்வது தமது இராணுவ தேவைகளுக்காக கட்டாய ஆட்சேர்ப்பு மேற்கொள்வது, மக்கள் உணவு, மருந்து, குடிநீர் என்பவற்றை பெற்றுக்கொள்வதிலுள்ள சவால்கள், சர்வதேச நிவாரண பணியாளர்கள் யுத்தப் பிரதேசங்களில் சென்று பணியாற்ற முடியாத நிலைமை, உள்ளிட்ட விடயங்கள் சர்வதேச சமூகத்தின் மத்திமில் மிகுந்த கவலையையும், கரிசனையையும் ஏற்படுத்தியுள்ளது.

மக்களின் அவலங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான வழிவகைகளை கண்டறிவதற்கு இரவு பகலாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்கம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மக்களை தங்க வைப்பதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளது. அதேவேளை கப்பல் மூலமாக உணவையும், மருந்தையும் வன்னிக்கு அனுப்புகிறது. காயப்பட்டவர்களை திருகோணமலைக்கு கொண்டுவரும் செயற்பாடுகள் அன்றாடம் நிகழ்கின்றன.

புல்மோட்டையில் இந்திய மருத்துவ அணியினர் தமது மனிதாயிமான பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

உலக உணவுத் திட்ட உதவியுடன் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த மக்களின் உணவுத் தேவைகளை அரசு மேற்கொள்கிறது. இதர சுகாதார, மாணவர்களின் கல்விக்கான வசதிகளும் செய்யப்படுகின்றன. எனினும் பிரமாண்டமான மனித பேரவலத்தில் இவை போதியனவல்ல.

முதலில் மக்களின் உயிருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். மரணப்பொறியில் யுத்த நரகத்தில் அகப்பட்டிருக்கும் மக்கள் விடுவிக்கப்பட வேண்டும். நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் அரசாங்கம் அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். சர்வதேச உதவியுடன் அதனை மேற்கொள்ள வேண்டும்.

இல்லையேல் முன்னர் மேற்கொள்ளப்பட்டது போல் 48 மணிநேரமோ, அதற்கு மேலானதுமான காலப்பகுதிக்கு இரு தரப்பினரும் தாக்குதல்களை நிறுத்தி மக்கள் பாதுகாப்பாக வெளிபேற வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு வெளியேறும் மக்களுக்கு முகாம்கள் அமைத்து நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை இன்னும் விரிவாகவும், ஆழமாகவும் செய்யப்ட வேண்டும். சிறுவர்கள், பெண்கள், முதியவர்களின் நலன்களில் அதிகூடிய அக்கறை காட்டப்பட வேண்டும்.

உளவளத்தை மேம்படுத்துவதற்கு, நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமது சொந்த நிலங்களில், வீடுகளில் மீளவும் கௌரவமாக, சுயமரியாதையாக வாழ்வதற்கான வகையில் எவ்வளவு விரைவாகவோ அவ்வளவு விரைவாக குடியேற்றப்படுவோம் என்ற நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும். இதனையே சர்வதேச சமூகம் வலியுறுத்துகிறது.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராய்வதற்கு தமிழ், முஸ்லீம் கட்சிகளின் தலைவர்களை அழைத்திருந்தார்.

வன்னியில் நிலவும் மனிதாபிமான நெருக்கடிகள் பற்றி அதில் ஆராயப்பட்டது. மனித கேடயங்களாக வைக்கப்பட்டிருக்கும் மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான வழிவகைகள் பற்றி கரிசனை செலுத்தப்பட்டது.

வடக்கு கிழக்கில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவது ஏகபிரதிநிதித்துவ கருத்தியலின் பொருத்தப்பாடற்ற தன்மை என்பன பற்றியெல்லாம் பேசப்பட்டது. தொடர்ச்சியாக நடைபெறவுள்ள கூட்டங்களில் அதிகாரப்பகிர்வு பகிர்ந்தளிப்பு பற்றியும் பேசப்படும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த கூட்டத்தில் பங்குபற்றாமல் விட்டது துரதிஷ்டமானதே. எப்போதும் நிராகரிப்பு அரசியலுக்கே பழகிப்போன தோஷம் இதில் பிரதிபலித்தது.

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக அதிகார பகிர்ந்தளிப்புத் திட்டத்தை நிராகரித்தது, 2000ம் ஆண்டளவில் ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் அதிகாரப் பகிர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதது, 2002 இல் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் உதவி வழங்கும் நாடுகளால் பரிந்துரைக்கப்பட்ட சமஷ்டி முறையை நிராகரித்தது.

அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவினூடாக மேற்கொள்ளப்பட்ட அதிகாரப்பகிர்வு முயற்சிகளை நிராகரித்ததெல்லாம் 60 வருடங்ககளாக எமது சமூகத்தில் நிலவும் நிராகரிப்பு அரசியல் தோஷத்தின் பிரதிபலிப்புக்களே.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஜனாதிபதியால் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு சமூகமளித்து தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ இல்லையோ தமது நிலைப்பாட்டை வலியுறுத்தும் ஜனநாயக உரிமையை பாவித்திருக்க வேண்டும்.

ஆனால் எமது சமூகத்தின் ஒரு பகுதியினரான ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் உயிராபத்தின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் போது அதற்கு பொறுப்புணர்வற்ற விதமாக செயற்படுவது வேதனையளிக்கிறது.

புலிகளின் முகவர்கள் என்ற நிலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு சுதந்திரமாக செயற்பட அவர்கள் முன்வர வேண்டும்.

இதற்கிடையே இந்திய பிரதமர் திரு மன்மோகன் சிங் அவர்கள் தமிழக முதல்வர் திரு. மு.கரணாநிதி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதில் இலங்கையின் ஜனாதிபதி தமக்கு உறுதியளித்திருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

எனவே நாம் நம்பிக்கைகளை தளரவிட வேண்டியதில்லை. எமது கண்ணீருக்கும், ரத்தத்திற்கும் விலையுண்டு அவை வீண் போய்விடாது.

வசந்த காலமொன்று எமது மக்களின் வாழ்வில் பிறக்க வேண்டும் என்ற நம்பிக்கைகளுடன் ஒன்றிணைந்து செயற்படுவோமாக.

திருமலை படுகொலைக்கு கண்டனம்

–இரா. துரைரட்ணம்

திருகோணமலை நகரில் கொலை செய்யப்பட்ட 6வயது சிறுமியின் படுகொலை சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்

திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரியின் 1ம் தரத்தில் கல்வி பயின்ற வர்ஷா ஜுட் ரெஜி (வயது 6) கடத்தப்பட்டு கப்பம் கோரி படுகொலை செய்யப்பட்டுள்ளார். பேரதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ள அனைவரையும் மாணவியின் கோரமான படுகொலைச் சம்பவமானது ஒரு பலமான சக்தி உள்ளவர்களாலேயே செய்யப்பட்டுள்ளது என மக்கள் சந்தேகிக்கின்றனர்.

மீறல் என ஆயுத வன்முறையாளர்கள் செய்த அட்டூழியங்களின் உச்சக்கட்டமே. பல மாத காலமாக திருகோணமலை நகரில் கடத்தல், கப்பம் கோருதல், வாகனக்கடத்தல், ஆள் கடத்தல், மனித உரிமை மீறல் செயற்பாடுகள் ஆயுத வன்முறையாளர்களின் அட்டூழியங்கள. இவற்றையெல்லாம் செய்தவர்களின் உச்சகட்டமே இந்த மாணவியின் படுகொலையாகும்

திருகோணமலை நகரைப் பொறுத்தவரையில் சட்டம், ஒழுங்கு நிலை செயற்படுகின்றவொரு நகரம், கிழக்கு மாகாணசபையின் தலைநகரம், இத்தோடு சர்வதேச புகழ் பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயம், இயற்கைத் துறைமுகம், அரசின் முப்படைகள் நிறைந்த ஒரு புகழ்பெற்ற நகரத்தில் ஒரு பாடசாலை மாணவி பாடசாலை முன்னால் கடத்தப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டதெனபது எம் அனைவருக்கும் அவப்பெயரை ஏற்படுத்தி உள்ளது. இச்சம்பவமானது மாணவ மாணவிகளுக்கும் பெற்றோர்களுக்கும் மூவின மக்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாது பெற்றோர்களுக்கு தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் அச்சம் நிறைந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இந்த நகரத்தில் நடக்கின்ற ஆயுத வன்முறையாளர்களின் அத்து மீறிய செயல்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்காததன் விளைவே இந்தக் கொலை. ஆயுதவன்முறையாளர்கள் கப்பம கோருகின்றவர்கள் மீது கடந்த காலத்தில் சட்ட ஒழுங்கை நிலை நாட்ட வேண்டியவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தால் இச்சிறுமிக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. மூவின மக்களும் ஒற்றுமையாக வாழுகின்ற இந்த நகரத்தில் இன்னும் ஒரு மாணவி கொலை செய்யப்படாமலிருக்க வேண்டுமாயின் எமது மக்களும், மாணவர்களும், கல்வி சமூகமும விழிப்பாக இருப்பதுடன் இக்கொலைகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய வழிமுறைகளை கையாள வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் இக் கொலைக்கு சட்ட நடவடிக்கை எடுக்க நாம் அனைவரும் எமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இது தொடர்பாக எமது குரல் ஓங்கி ஒலிக்கவேண்டும் விசேடமாக கிழக்கு மாகாணசபை ஆரம்பிக்கப்பட்டு 10 மாதங்கள் நடந்தேறிய நிலையில் கிழக்கு மாகாண தலைநகரில இப்படிப்பட்ட படுகொலை நடந்ததென்பதற்கு கிழக்கு மாகாண சபையும் சட்ட ஒழுங்கு அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் முதலமைச்சரே பொறுப்புக் கூறவேண்டும் எனவே முதலமைச்சர் அவர்கள் குறிபிட்ட காலத்திற்குள் இந்தக் கொலை சூத்திரதாரியை கண்டுபிடிக்க வைப்பதோடு மத்திய அரசாங்கம் ஜனாதிபதி அவர்கள் தயவு தாட்சணையின்றி இந்த கொடூரமான கொலைகளை செய்தவர்களை விரைவாக கைது செய்ய உத்தரவு பிறப்பிப்பதோடு மனித உரிமைகளை மதிக்கின்ற, சிறுவர் நலன் பாதுகாக்கின்ற, ஜனநாயகத்தை மதிக்கின்ற ஆயுத வன்முறையை வெறுக்கின்ற அனைத்துச் சக்திகளும் கொலையைக் கண்டு பிடிக்கவும் தடுத்து நிறுத்தவும் பரிபூரண ஆதரவினையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும். திருகோணமலை நகரத்தில் நடந்த இக் கொலை இறுதிக்கொலையாக இருப்பதற்கும் கடைசிக்கொலையாக இருப்பதற்கும், வன்முறையாளர்களின் கொலை முயற்சிக்கு முடிவு கட்டுவதற்கும். இக்கொலைகளுக்கு முடிவில்லையெனில் எமது குரல் ஓங்கி ஒலிப்பதற்கு நாம் அணிதிரள்வோமாக.

வன்முறை கலாச்சாரத்திற்கு.....

01ம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையொரு ஜனநாயக நாடு. இலங்கை அரசு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனநாயக அரசு என்ற வகையில் வடக்கு கிழக்கில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான அதனை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

உதாரணமாக வன்னியில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களை பார்வையிடுவதற்கும், அவர்களுக்கு ஆறுதல் சொல்வதற்கும் இடம் பெயர்ந்து அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் அமைந்துள்ள முகாம்களில் தங்கியுள்ளவர்களை சந்திப்பதற்கும் ஜனநாயக அரசியல் நிறுவனங்களையும், சமூக ஆர்வலர்களையும் அனுமதிக்க வேண்டும்.

பாதுகாப்பு நடைமுறைகளையும் கரிசனைக்கு எடுத்து இதனை செய்ய வேண்டும்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைவிட மக்கள் தாம் ஏனைய பகுதிகளில் சுதந்திரமாக வாழ்கிறோம் என்று அவர்கள் உணரும் விதமாக நடைமுறைகள் அமைய வேண்டும்.

சுதந்திரத்தின் வாசனையை அவர்கள் நுகர வேண்டும் தமது வாழ்க்கை ஒன்றில் புலிகளின் முகாம்களில் கட்டாயப் பயிற்சி அல்லது வேலியிடப்பட்ட முகாம்களுக்குள் தான் என்று மக்கள் விரக்தியுற இடமளிக்கக் கூடாது.

சொந்த பிரதேசங்களில் அவர்கள் சுயமரியாதையுடனும், கௌரவத்துடனும் வாழும் நாள் வெகு தொலைவில இல்லை என்பது உணர்த்தப்பட வேண்டும்.

சிறார்களின் உடல், உள வளர்ச்சிக்கான எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்வதற்கான செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்ட வேண்டும்

அதிகார பகிர்வு கட்டமைப்பு ஒன்றினூடாக தமிழ் மக்கள் தமது பிரதேசங்களில் தமது பிரதான அலுவல்களை தாமே மேற்கொள்கிறோம் என்று கருதுமளவிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் ஒரு அதிகாரப் பகிர்வு கட்டமைப்பு ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அரசாங்கம் செயற்படுகிறது எனினும் அது முழுமையான அதிகார கட்டமைப்பாக உருவாக்கப்படவில்லை. அதற்கு இனனும் வெகுதூரம் செல்லவேண்டியிருக்கிறது. நிலப்பயன்பாடு, பொலிஸ் அதிகாரம், நிதி ஆதாரம் என்பவற்றில் இன்னும் பல மைல் தூரங்களை கடக்க வேண்டியிருக்கிறது.

13வது திருத்தச் சட்டத்தின் கீழான அதிகாரங்கள் முழுமையாக பகிர்ந்தளிக்கப்படும் பட்சத்தில் கிழக்கு மாகாண சபை மேலும் சிறப்பாக செயற்பட முடியும். குறிப்பாக நிதி அதிகாரம் அதன் ஜீவநாடி. அது அதற்கு வழங்கப்பட வேண்டும்.

காலத்தை விரயமாக்காது வடக்கிலுள்ள மக்களுக்கும் அதிகார பகிர்ந்தளிப்பிற்கான அரசியல் கட்டமைப்பொன்று உருவாக்கப்படல் வேண்டும். மக்களின் மீள் குடியேற்றம், உள்ளக கட்டமைப்பு வசதிகள் வேகமாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

ஒரு நிரந்தர தீர்வை நோக்கிய ஒரு பரிணாம வளர்ச்சிக்கான அடித்தளம் இடப்பட வேண்டும்.

இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக, பறங்கி இன மக்கள் அனைவருமே நாம் யாருக்கும் இரண்டாம் பட்சம் இல்லை என்ற மனோ நிலையுடன் இந்த நாட்டில் ஐக்கியமாக வாழ்வதற்கான, நாம் அனைவரும் இலங்கையர் என்று சிந்திப்பதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

ஜனநாயகம், சமூக பன்மைத்துவம், அரசியல் பன்மைத்துவம், மனித உரிமைகள் ஆகியவற்றின் அடித்தளத்தில் இவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்துவிதமான வன்முறைகளும் வேருடனும் வேரடி மண்ணுடனும் களையப்பட வேண்டும்.

தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:–

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சு பொறுக்குதில்லையே!

புலிகளின் முகவர்களாக சுவிற்லாந்தில் செயற்படுபவர்கள் ஐ.நா வின செயலாளர் நாயகம் பான் கீ. மூனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர்

சுவிஸ் தமிழர் என்ற பெயரில் அனுப்பப்பட்ட இக் கடிதத்தில் சண் தவராசா (துணைத்தலைவர்) தம்பிப்பிள்ளை நமச்சிவாயம் (செயலாளர்) ஆகிய பேர்வழிகள் கையெழுத்திட்டுள்ளனர்.

"சுவிஸில் உள்ள நாடற்ற தமிழர்களின் முப்பதுக்கு அதிகமான அமைப்புக்களின் ஒன்றியமான சுவிஸ்லாந்தின் தமிழர் பேரவை தங்களால சோர்வின்றி இலங்கையின் இன முரண்பாடுகளுக்கு ஒரு நிலையான அமைதி தீர்வு காண மேற்கொள்ளப்பட்டு வரும் அமைதி நடவடிக்கைகளை பாராட்டுகிறது." (17-03-2009 புதினம்)

இவ்வாறே இந்தக் கடிதம் ஆரம்பிக்கிறது.

இதேவேளை புலிகளின் இணையமான 'தமிழ்வின்' இல் வன்னியிலிருந்து தமிழ்குடிமகன் என்ற பெயரில் ஐ.நா மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதமொன்று பிரசுரமாகியிருந்தது.

அதில் "பான் கீ மூன் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளும் ஒருதலை பட்சமாகவும் செயற்படுகிறார் போல் தெரிகிறது. சிலவேளை தனது தாய் நாட்டிற்கு கட்டுப்பட்டு நடக்கிறாரோ தெரியவில்லை." என்றிருக்கிறது. (17-03-2009 தமிழ்வின்)

சுவிஸிலிருந்து கையளிக்கப்பட்ட மகஜரின் முதல் பந்தியும், நவநதம்பிள்ளை அவர்களுக்கு வன்னியிலிருந்து ஒரு தனிப்பட்ட மனிதரின் கடிதம் என்று எழுதப்பட்டதும் புலிகளது சித்து விளையாட்டுக்களே என்பதை பகுத்தறிவு உள்ளவர்கள் புரிந்து கொள்வார்கள்.

சுவிஸ் தமிழர் பேரவையினால் ஐ.நா வின் செயலாளர் நாயகத்துகு எழுதப்பட்ட கடிதத்தில் "இந்திய அரசை இந்தப் போரில் ஒரு முக்கிய பங்காளியாக பார்ப்பதால் அவர்களின் கைகளில் எமது நோயாளிகளையும், காயப்பட்டவர்களையும கவனிக்கும் பொறுப்பை ஒப்படைக்க முடியாது என்றிருக்கிறது. (17-03-2009 புதினம் இணையம்)

இந்தியா உணவு அனுப்ப வேண்டும், மருந்து அனுப்ப வேண்டும், ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கும் மனிதாபிமான நெருக்கடிகளில் உதவ வேண்டும், தலையிட வேண்டும் என தமிழகத்தின் தலைவர்களும், மக்களும் அயராது குரலெழுப்பி வரும் வேளையில் அவலப்பட்டு நிற்கும் எம் மக்கள் அதனை எதிர்பார்த்து நிற்கையில் இந்தியாவின் மருத்துவ மனிதாபிமான உதவியை புலிகளின் முகவர் அமைப்பான சுவிஸ் தமிழர் பேரவை நிராகரித்துள்ளது.

இந்தியாவின் மருத்துவ உதவியை அது வேண்டாமென்று ஐ.நா சபைக்கு முறைப்பாடாக கொண்டு சென்றுள்ளது

உடனடியாக போர் நிறுத்தம் தேவை என்றும் வன்னி மக்களுக்கு உடனடி உணவும், மருந்தும் தேவை என்றும் கோரிக்கை விடும் இவர்கள் முன்னுக்கு பின் முரணாக அதனை நிராகரிப்பதோடு வன்னி மக்கள் யுத்தம் இல்லாத பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கோரிக்கை எதனையும் விடவில்லை.

கனடாவிலோ, சுவிஸிலோ, லண்டனிலோ, பிரான்சிலோ அமெரிக்காவிலோ ஏனைய மேற்கத்தைய தேசங்களிலோ ஆர்பாட்டம் செய்யும் புலிகளின் முகவர் அமைப்புக்கள் வன்னி மக்கள் - மரணத்தின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் மக்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு செல்வதற்கு புலிகள் அனுமதிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுப்பதில்லை.

"உண்மையான சுயாதீனமான ஆதாரங்கள் இல்லாது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தடுத்து வைத்துள்ளது என குற்றச்சாட்டு ஐ.நா வின் நேர்மை, நடுநிலை என்பவற்றை சந்தேகம் கொள்ள வைக்கிறது" (17-03-2009 புதினம்)

இதுவும் ஐ.நா விற்கு சுவிஸ் தமிழர் பேரவை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் காண்படுகிறது.

பகுத்தறிவு உள்ளவர்கள் - பொதுப்புத்தி உள்ளவர்கள் சொல்ல வேண்டும் அவர்களே கூறும் கொத்துக் குண்டுகளும், எறிகணைகளும் விழும் இந்த வெறும் முப்பது சதுர கி.மீ பரப்பளவில் அகப்பட்டிருக்கும் மக்கள் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச்செல்ல விரும்ப மாட்டார்களா இல்லையா என்பதை அவர்கள் அகப்பட்டிருப்பது அவர்களின் சொந்த நிலம் என்று சுவஸ் தமிழர் பேரவை சொல்கிறது, நடேசனும் சொல்கிறார், வேறு சிலரும் சொல்கிறார்கள்.

அவர்களே கூறும் மூன்று லட்சம் மக்களின் சொந்த நிலமும் இந்த முப்பது சதுர கி.மீ பரப்பளவுதானா?

இதனை மந்தைக் கூட்டம் போல் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் ஒருபகுதியும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

முழுத் தமிழர்களுக்கும் முட்டாள் பட்டம் கட்டும் வேலை இது.

உண்மை என்னவென்றால் புலிகளை வைத்து உலகளாவிய அளவில் பிழைப்பு நடத்தும் - வயிறு வளர்க்கும் கூட்டம் இந்த யுத்தத்தில் அரசின் வெற்றி என்பது தமது பிழைப்புக்கு ஆப்பு என்று அங்கலாய்க்கிறது.

அதற்காக ஒன்றரை லட்சம் தமிழர்களின் மரணத்திலாவது புலிகளின் தலைமை பாதுகாக்கப்பட வேண்டுமென்று கருதுகின்றது

நாளும் பொழுதும் தமிழர்களான குழந்தைகள் பெண்டு பிள்ளைகளின் சிதறுண்ட உடல்களை அங்கவீனமானவர்களை வைத்து இந்தக் கூட்டம் உலகளாவிய அளவில் பிழைப்பு நடத்துகிறது.

சீ வெட்கம் கெட்ட ஈன நாய்களே!

சில சந்தர்ப்பங்களில் பெண்களின் துணியில்லாத உடல்களை புலிகளின் இணையங்கள் காட்சிப் பொருளாக்கின.

ஒரு மாபெரும் மனித அவலத்தை வண்ணங்களில் வெளியிட்டு குஷிப்பட்டுக் கொண்டு திரிகின்றன.

புலி பாசிசத்தின் முகவர்களான இந்த சக்திகள் உலகமெங்கும் வாழும் தமிழர்களின் மனிதாபிமான உணர்வுகளை சுரண்டி ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களிலும் வாழ்கின்றன.

இதற்குள் சர்வதேச சமூகம் உணவும் மருந்தும் அனுப்பாவிட்டால் நாங்கள் வன்னிக்குப் போகிறோம், மக்களின் அவலங்களுக்கு ஒத்தடம கொடுக்கிறோம் என்று பீலா வேறு விடுகின்றன.

இந்தக் கோஷ்டிகளுக்கெல்லாம் ஒரேயொரு தாகம்தான் உண்டு. வன்னியிலுள்ள ஒட்டுமொத்த தமிழர்களும் அழிந்தாலும் தலைவர் உயிர் பிழைத்தால் தமது வாழ்வு நித்தியப்பெரு வாழ்வாக செழிக்கும் என எதிர்பார்க்கின்றன.

இந்த உலகளாவிய மக்கள் விரோதிகள்- சமூக விரோதிகள் - புல்லுருவிகள் சமூக அரங்கிலிருந்து துரத்தியடிக்கப்பட வேண்டும்.

ஏனெனில் இநத சக்திகளே ஈழத் தமிழர்களின் ஒட்டுமொத்த அழிவிற்கும் உந்து சக்திகளாக மிகப்பெரிய பங்காளிகளாக இருந்து கொண்டிருக்கின்றன.

அகதித்தமிழன். 18-03-2009

அரசியலமைப்பு விவகார அமைச்சருடனான கலந்துரையாடல்

அரசியலமைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் திரு டி.யூ குணசேகர அவர்கள் மார்ச் 26ம் திகதி கொழும்பில வசிக்கும் தமிழ் நண்பர்களுடன ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார். இக் கலந்துரையாடலில் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப், த.வி.கூ அரசியல் கட்சிகளை சார்ந்தவர்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிவோர் கல்வியாளர்கள் என பலரும் பங்குபற்றினர்.

சுமார் நூறு பேர் வரையில் பங்குபற்றிய இக் கலந்துரையாடலில் அமைச்சர் டி.யூ அவர்கள் வடக்கின் மனிதாபிமான நெருக்கடி அதிகாரப்பகிர்வின் அவசியம், நாடடின் அரசியல் சூழ்நிலை, பொருளாதார நெருக்கடிகள், இந்தியாவின் தேர்தல் நிலவரங்கள், சர்வதேச சூழல் பற்றி கருத்துரை வழங்கினார்.

குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் பன்முகத்தன்மை கொண்ட மாற்று அரசியல் தலைமைத்துவம் உருவாக வேண்டியதன் அவசியத்தை பல்வேறு கோணங்களிலும் வலியுறுத்தினார்.

மேலும் நடுநிலையாளர்களும், இடதுசாரிகளும் இணைந்த அரசியல் சூழல ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டானதும், செழுமைமிக்கதும், தூரதிருஷ்டி உள்ளதுமான ஜனநாயக தலைமைத்துவமொன்று உருவாக வேண்டியதன் வரலாற்று அவசியம் அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பலராலும் வலியுறுத்தப்பட்டது.

கந்தன் கருணை.....

01ம் பக்கத் தொடர்ச்சி

பூட்டிய சிறையில் நிகழ்ந்த இந்த கோரம் ஜூலியன் வாலாபாக் படுகொலைக்கு ஒப்பானது.

எமது சமூகத்தில் பாசிச வன்முறை கலாச்சாரத்தை இல்லாதொழிப்பதற்கும், ஜனநாயகமும், மனித உரிமையும் பேணப்படும் சூழ்நிலை ஒன்றை ஸ்தாபித்தலே இவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

அக்குரஸ்ஸ தற்கொலை

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

அக்குரஸ பிரதேசத்தின் கொடபிட்டிய ஜும்மா பள்ளிவாசலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் கொடூரத்தனமான முறையில் 15 பொது மக்கள் கொல்லப்பட்டும் 40 க்கு மேற்பட்டோர் காயடைந்துமுள்ள சம்பவம் தொடர்பாக இலங்கை கம்யூனிசக் கட்சி கடுமையான கண்டனத்தைத தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர். டி.யூ. குணசேகரா விடுத்துள்ள அறிக்கையில். தோல்விகளின் நிமித்தம் ஏற்பட்ட தங்கள் குருரப்பலியை வெறித்தனமான செயல்கள் மூலம் திருப்திப்பட்டுக் கொள்ள முனைந்த பாசிச புலித்தலைமையின் மூர்க்கத்தனமான மற்றொரு கொடிய சம்பவமே இதுவாகும்.

இந்தத் துக்கமான சம்பவம் ஒரு புனித ஸ்தலத்தில் சமய விவகார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட தீக்கதரிசி மொஹமெட் அவர்களின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்ட நிகழ்வின்போது இடம்பெற்றுள்ளது. இந்த விழாவானது உண்மையிலேயே அமைதி, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான ஆறு அமைச்சர்களுடன் கூடிய மதிப்புமிக்க சமயத் தலைவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்வாக அமைந்திருந்தது.

இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பெருந்தொகையானோர் இலங்கை சுதந்திரக்கட்சி மற்றும் இலங்கை கம்யூனிசக் கட்சிகளைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகளான இளைஞர்களும் மற்றும் வளர்ந்துவரும் இரண்டாம் நிலை மாவட்ட தலைவர்களுமாவர்.

தோல்விகளின் நிமித்தம் ஏற்பட்ட தங்கள் குருரப் பசியை வெறித்தனமான செயல மூலம் திருப்திகொள்ள கொடுரத்தனமான முயற்சியைத் தேடிக்கொண்ட கொடுரமான பாசிசப் புலித்தலைமையின் மூர்க்கத்தனமான அதன் இன்னுமோர் கொடுரச்சம்பவமே இதுவாகும்.

இழப்புக்கு ஆளானவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ள இலங்கை கம்யூனிசக் கட்சி தங்கள் உயிரை அர்ப்பணித்துக்கொண்ட இளம் தலைவர்களுக்கும், பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தின்போது தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்கும் தங்கள் மரியாதையை செலுத்துகின்றது.

இலங்கை கம்யூனிசக் கட்சி அதன செங்கொடியை தாழ்த்தி மதிப்பு மரியாதையுடன் தனது மரியாதையைச் செலுத்துகின்றது.

ஒரு தோழனைப் பார்த்தேன்...

நீண்ட நாட்களுக்குப் பின்னர் என்னுடன் பழகிய எனது பாசறையில் பயின்ற ஒரு தோழனை அண்மையில் பார்த்தேன். நீண்ட நாட்களுக்குப் பின் சந்தித்ததால் தற்போதைய வன்னி நிலவரம் அங்கு இடம்பெறும் சண்டை, அரசியல பற்றி பேச்சு போனது.

புலிகள் அழியவேண்டியவர்கள் தான் அதில் எனக்கு மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், வன்னியில் இடம்பெறும் இனப்படுகொலையை தடுக்க யுத்தம் நிறுததப்பட வேண்டும் யுத்தத்தை நிறுத்த அரசுடன் இருக்கும் துணைக்குழுக்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றன என 2000 ஆம் ஆண்டுவரை எங்கள் செயற்பாடுகளுக்கெல்லாம் தலைமை பாத்திரம் ஏற்றிருந்த அந்த முன்னாள் தோழன் கூறிய ஒவ்வொன்றும் எனக்கு வியப்பாக இருந்தது.

இலங்கையில் செயற்படும் தமிழ் அரசியல் கட்சிகளை புலிகளும் அவர்களது ஆதரவாளர்களும் இழிவுபடுத்தும் பாணியில் அவரும் துணைக்குழுக்கள் என கூறியது மேலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவை துணைக்குழுக்கள் இல்லை ஜனநாயக வழியில் செயற்படும் அரசியல் கட்சிகள். இலங்கையில் அதிகாரப் பகிர்விற்காகவும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் குரல்கொடுக்கும் கட்சிகள் இந்த அரசியல் கட்சிகளுக்கு பாதுகாப்பு கொடுபது இலங்கை அரசின் கடமை. புலிகள் சார்பு கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட அனைத்து கட்சிகளுக்கும் இலங்கை அரசால் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே அவர் தமிழ் தேசிய கூட்டமைப்பை துணைக்குழு என சொல்லத்துணிவாரா என்ற கேள்வி எனக்குள் எழுந்தது.

புலிகள் அழிந்தால் இலங்கை அரசு ஒரு தீர்வை வைக்காது என்ற அவரது வாதமும் ஏற்புடயதாக எனக்கு படவில்லை. உலகின் பார்வை இன்று இலங்கைத் தமிழர்கள் இனப்பிரச்சனை மீது விழுந்திருக்கின்றது. புலிகள் இல்லாவிட்டால் தமிழ் மக்கள் ஜனநாயக அடிப்படையில், சட்ட வலுவோடும், அங்கீகாரத்தோடும் நியாயமாகவும் [illegible] இலங்கை அரசு தட்டிக்கழித்துவிட முடியாது. தீர்வை கட்டாயம் வைத்துத்தான் ஆக வேண்டும் அத் தீர்வானது முழு அதிகாரங்களையும் கொண்ட தீர்வாக அமைந்தால் தமிழர்கள் நிம்மதியாக சுய கௌரவத்துடன் வாழமுடியும்.

தீர்வின் தன்மையைப் பொறுத்து அவர் சொன்ன துணைக்குழுக்கள் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கும், மக்கள் பிரச்சினைக்காக அரசுடன் பேச்சுக்களை நடத்தும், மக்கள் பிரச்சினைகளுக்காக ஜனநாயக வழிப் போராட்டங்களை நடத்தும், வட-கிழக்கில் பேச்சு சுதந்திரத்தை, எழுத்து சுதந்திரத்தை ஜனநாயக பண்புகளை இனன பிற மனித பண்புகளை மதித்து நடக்கும் நிலை உருவாகும். புலிகள் பாணி வன்முறை, ஆயுத கலாச்சாரம் இன்று எமது மக்களை எங்கு கொண்டு போய்விட்டுளளது. புலிகளின் அழிவுக்கும் இவையெல்லாம் தான் காரணங்கள் என்பது பலருக்கும் தெரியும் அவற்றை ஒரு பாடமாகக் கொண்டு நல்லதை யோசித்து நல்லதைச் செய்ய நண்பர் கூறிய துணைக்குழுக்கள் முன்வருவார்கள் என நம்புகிறேன்.

அந்த நண்பன் குறிப்பிட்ட மற்றொரு விடயம் ராஜபக்ஷ அரசையும் ராஜபக்ஷவையும் பற்றியது ராஜபக்ஷ இன அழிப்பு செய்கிறார் இலங்கையில் இருந்த அதிபர்களில் ராஜபக்ஷ மோசமானவர் என்றார். புலிகள் அழிவதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை என்றவர் ராஜபக்ஷவை மோசமானவர் என்றும் கூறியது முன்னுக்கு பின் முரணானதாக இருந்தது. வன்னியில் மக்கள் இறப்பதைப்பற்றி சொல்லி அவர் தனது கருத்துக்கு வலுவூட்ட முனைந்தது தெரிந்தது. வன்னியில் மோதலுக்குள் சிக்குண்டு மக்கள் இறப்பதற்கு காரணம் யார்? புலிகள் தமது பாதுகாப்புக்காக மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச் செல்ல விடாமல் தடுத்து வைத்திருப்பதால் மக்கள் பாதிக்கப்படும் நிலை அதிகரித்து வருகின்றது. பொதுமக்கள் உயிரிழப்பதையிட்டு யார் தான் வருத்தப்படாமலிருக்க முடியும் ஆனால் புலிகளின் கட்டளைகளுக்கு பணியாது உயிர் பாதுகாப்புக்காக அங்கிருந்து வெளியேறும் மக்கள் மீது புலிகள் தாக்குதல் நடாத்தியதையும், இதனால் பல பொது மக்கள் காயமடைந்தும், உயிரிழந்தும் இருப்பதை ஐ.நா. நிறுவன அதிகாரிகளே சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவற்றை தெரிந்துகொள்ளாமல் அல்லது புரிந்து கொண்டும் விதண்டாவாதமாக பேசுவதால் இன்னும் நம் சமூகம் அழிவுப்பாதைக்கு செல்வதற்கு நீயும் பாத்திரவாளியாக இருந்து விடாதே தோழா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய தமிழ் மக்களே, ஆற்றல் மிகு தோழர்களே,



பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமைக குழுவின் கூட்டம் 2009 பெப்ரவரி 16ம் திகதி நடைபெற்றது. மக்களுக்காக உயிர்த் தியாகம் செய்த தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமான அஞ்சலியுடன் ஆரம்பமானது. பெப்ரவரி 20ம் திகதி வரை ஐந்து (5) நாட்கள் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் தலைமைக் குழுவுடன் கட்சியின் பிராந்திய அமைப்புக்களில் செயற்பட்டு வரும் தலைமைத் தோழாகளும் இணைந்து விரிவு படுத்தப்பட்ட ஒரு தலைமைக் கூட்டமாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தீர்மானங்களிற் சிலவற்றை இங்கு காணலாம்

கட்சியின் இந்த விரிவுபடுத்தப்பட்ட தலைமைக் கூட்டத்தில்,

1. தற்போது நிலவும் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பாதுகாப்பு நிலவரங்கள்

2. கட்சியின் முன்னேற்றத்திற்கான அரசியல் மற்றும் கட்சி அடைய வேண்டிய மூல இலக்குகள்,

3. அவற்றை அடைவதற்காக எதிர்காலத்தில் கட்சி முன்னெடுக்க வேண்டிய உபாயங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள்.

4. வடக்கு கிழக்கு மக்களின் அபிலாஷைகளை ஈட்டுவதற்காகவும், புனர்வாழ்வுக்காகவும் இப்பிரதேசங்களின் அபிவிருத்திக்காகவும் அரசியல் மற்றும் சட்டம் ஒழுங்கு, பாதுகாப்பு முன்னேற்றங்களுக்காகவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள். அவை தொடர்பாக நாம் எழுப்ப வேண்டிய கோரிக்கைகள்

5. கட்சி ஸ்தாபனத்தை முன்னேற்றவும் பலப்படுத்துவதற்குமான வழிவகைகள் மற்றும் அந்த அடிப்படைகளில் முன்னெடுககப்பட வேண்டிய ஸ்தாபனரீயான வேலைத்திட்டங்கள்.

6. கட்சியின் பத்திரிகை மற்றும் இதர வெளியீடுகள், பிரசுரங்கள், இணையத்தளங்கள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள்.

7. ஐக்கிய முன்னணி மற்றும் நட்பு சக்திகளுடனான உறவுகளைப் பலப்படுத்துதல்.

8. இலங்கை அரசு, இந்திய அரசு தமிழக மக்கள் மற்றும் வெளிநாட்டு சக்திகளுடனான உறவுகள்.

என்பன தொடர்பாக மிகவிரிவாக கலந்துரையாடப்பட்டது. தோழர்களின் ஆலோசனைகள் அபிப்பிராயங்கள், முன்மொழிவுகள் கவனத்திற்கொள்ளப்பட்டு அவற்றின் அடிப்படையின் கட்சியின் எதிர்காலம், கட்சியால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியவைகள் பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தோழர் வரதராஜப் பெருமாள் அவர்களின் தலைமையில் நடைபெற்ற முதலாவது நாள் கூட்டம்.

தற்போது நிலவும் அகப்புற அரசியல் மறறு ம் பாதுகாப்புச் நீழ்நிலைனமகள்

கூட்டத்தின் முதல் விடயமாக தற்போது நிலவம் அரசியல் சமூக மற்றும் பாதுகாப்பு சூழ்நிலைகள் பற்றி அவரவரது கணிப்புகளையும் கருத்துக்களையும் அவரவரது அனுபவத்துக்கு உட்பட்ட பிராந்தியங்கள் மற்றும் துறைகள் தொடர்பான தத்தமது அபிப்பிராயங்களையும் முன்வைத்தனர். தொடர்ந்து அவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் வகையில் கருத்துப் பரிமாறல்களும் விரிவாக இடம்பெற்றன வடக்கிலும் கிழக்கிலும் புலிகளின் கட்டுப்பாட்டில் இன்னமும் உள்ள வன்னியிலும் வாழுகின்ற மக்களின் நிலைமைகள், புலிகளின் தற்போதைய நிலவரம் மற்றும் எதிர்கால சாத்தியங்கள், இலங்கை அரசின் நிலைமை இலங்கையின் தெற்கில் உள்ள நிலைமைகள், ஏனைய சிறுபான்மைத் தேசிய இனங்களின் தலைமைகளின் நிலைமைகள், வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் நிலைமைகள், இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் சர்வதேச சமூகங்கள் இலங்கையின் இனப்பிரச்சினையோடு தொடர்புபட்டு நிற்கும் விதங்கள் என பிரதானமான விடயங்கள் அனைத்தையும் பல்வேறு கோணத்திலும் தோழர்கள் ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின் போது அடையாளம் கண்டு கொண்டுள்ள விடயங்களை பின்வருமாறு தொகுத்துத் தருகின்றோம்.

1. புலிகளுக்கு எதிரான இலங்கை அரசின் இராணுவ வெற்றி என்பது இனப்பிச்சினையின் சிக்கலில் ஒரு பகுதியான விடயமேயெனினும் இந்த வெற்றிகள் சிங்கள இனவாத அலைகளைத் தலையெடுக்கப்பண்ணியிருக்கின்றன என்பதை நாம் கவனத்திற் கொண்டேயாக வேண்டும். மகிந்த ராஜபக்ஜ அவர்களின் தலைமையிலான அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீவு காணும் முயற்சிகளை அரசியல் யாப்பு நிபுணர்கள் குழு, அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழு ஆகியவற்றை உருவாக்கி ஆராய்ந்து முடிவெடுக்கும் முயற்சிகளை ஆரம்பித்தபோது இருந்த நம்பிக்கைகள், தற்போது குறைந்துபோய் உள்ளன என்பதுவும் உண்மையே. அரசாங்கம் மீண்டும் மீண்டும் இராணுவ வெற்றியின் பின்னர் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீவை முன்வைக்குமென கூறிவருகின்ற போதிலும் இன்றுவரை ஏற்புடையதான ஒரு தீவு திட்டத்தினை முன்வைக்காதது தமிழ் மக்கள் மத்தியில் அரசைப்பற்றிய கேள்விக்குறிகளையே அதிகரித்து நிற்கிறது எனபதையும் நாம் சுட்டிப்பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம்.

2. சில ஆண்டுகளுக்கு முன்னர் புலிகளுடன் தான் இலங்கை அரசாங்கம் பேசவேண்டும் புலிகளை ஏற்கச் செய்வதன் மூலம்தான் ஓர் அரசியல் தீவை அடைய முடியும் என்கிற நம்பிக்கை அல்லது கட்டாயம் இலங்கையின் பல மட்டங்களிலும் சர்வதேச சமூகங்களின் மத்தியிலும் காணப்பட்டன. தமிழ் மக்களின் பிரச்சினை வேறு புலிகளின் பயங்கரவாதப் பிரச்சினை வேறு என்று நாம் கூறி வந்ததை பலரும் ஏற்கவுமில்லை புரிந்து கொண்டிருக்கவில்லை. ஆனால், இப்பொழுது அந்த விடயம் அனைவர் மத்தியிலும் தெளிவாகி வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள பல பிரதானமான நாடுகள் தற்போது புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டும என்றும் இலங்கை அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு [illegible] ரீதியிலான தீவை முன்வைக்க [illegible] என்றும் தெளிவாக வலியுறுத்தி வருகின்றன.

3. இந்தியாவும் புலிகளுக்கு எந்த ஆதரவையும் தரமாட்டாது என்பதை உறுதியாகக் கூறுவதோடு இனப்பிரச்சினைக்கான தீவை படிப்படியாக உறுதியாக நிறைவேற்ற வேண்டும் என்று எல்லா வகையிலும் வலியுறுத்தி வருகின்றது.

4. கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கை அரச படைகள் விடாது நடாத்தி வரும் போரினால் பல லட்சம் மக்கள் எல்லாவற்றையும் இழந்து அகதிகளாகியுள்ளனர். அதேவேளை இன்னமும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் ஆயுத முனையில் மிரட்டப்பட்டு பணயக்கைதிகளாகவும் மனித கேடயங்களாகவும் வைக்கப்பட்டுள்ளனர். இதனால் பலர் ஒவ்வொருநாளும் இறக்கவும், காயப்படவும் வேண்டியிருக்கின்றது.

5. கடந்த 25 ஆண்டுகால யுத்தத்தின் காரணமாக 8 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் மேலைத்தேய நாடுகளில் அகதிகளாகக் குடியேறியுள்ளனர். அதே போல சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் அகதிகளாக இந்தியாவில் உள்ளனர். அதில் அரைப்பங்கினர் அகதி முகாம்களில் தமிழக அரசின் உலர் உணவு நிவாரணத்தில் தங்கியிருக்க வேண்டியவர்களாக உள்ளனர். மேலும் உள்நாட்டிலேயே வன்னி திருகோணமலை, மட்டக்களப்பு, யாழப்பாணம் ஆகிய பகுதிகளில் எண்ணிக்கை ரீதியில் சுமார் 5 இலட்சம் மக்கள் கடந்த இருபது ஆண்டுகளாக எப்போதும் இடம்பெயர்ந்தவர்களாகவோ அகதிகளாகவோ சொந்த வீடுவாசலின்றி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கு புதிய வாழ்வளித்தல், யுத்தத்தால் அழிக்கப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் மற்றும் அரச சொத்துக்களைப் புனர் நிர்மாணம் செய்தல் கடந்த 25 ஆண்டுகளில் தவறவிடப்பட்ட அபிவிருத்தி விடயங்களை தேடி அடைதல் ஆகியன மிகப்பெரும் சவால்களாக உள்ளன.

தோழர் சிறிதரன் அவர்கள் தலை[illegible] ஆகிய [illegible]

எமது கட்சியின் மூல இலக்குகள்

மேலே விபரிக்கப்பட்டுள்ள அரசியல் சமூக நிலைமைகளின் மத்தியில் அடுத்து வரும் ஒருசில ஆண்டுகளுள் கட்சித் தோழர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து கட்சியை எந்தெந்த பிரதான இலக்குகளை நோக்கி முன்னேற்ற வேண்டும் என ஆராயப்பட்டதில பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1.அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் குறைந்த பட்சம் கணிசமான அளவு பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் கொண்ட கட்சி மாநாட்டை நோக்கி முன்னேறுதல் வேண்டும். அதற்குரிய வகையில் தற்போது கட்சியில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களையும் முறைப்படுத்துதல்.கட்சியோடு தொடர்பிலிருக்கும் பழைய உறுப்பினர்கள் கட்சியின் தீவிரமான ஆதரவாளர்களுடனான மற்றும் புதிய தலைமுறையினரிலிருந்தும் உறுப்பினர்களை திரட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இந்த நடவடிக்கைகளை இலங்கையிலும், வெளிநாடுகளிலும், தமிழகத்திலும் மேற்கொள்ளுதல்.

2. அதிகாரப் பகிர்வுக்காக தொடர்ந்து விடாப்பிடியாகச் செயற்படுவதில் நாம் ஓர் அரசியற் சக்தியாக இருந்து வருகிறோம் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருகக முடியாது எனினும் இந்த விடயததில் ஒரு சரியான பரந்த நாடு தழுவிய இயக்கமாக முன்னெடுக்கும் திட்டத்தை நாம் செயற்படுத்த வேண்டும். ஜனநாயகத் தமிழர் தேசிய கூட்டமைப்பிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றுடனும தென்னிலங்கையின் இடதுசாரிக் கட்சிகளுடனும், முஸ்லிம் மக்களின் கடசிகளுடனும் மலையகக் கட்சிகளுடனும் கலந்துரையாடி அதிகாரப் பகிவு விடயத்தை நாடு தழுவியதோர் இயக்கமாக முன்னெடுக்க வேண்டும். இவ்விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளில் அதிகாரப பகிர்வுக்கு உண்மையாகவே ஆதரவாக பலர் உள்ளனர் அவர்கள் அனைவரையும் நாம் இந்த இயக்கத்தில் இணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த இயக்கத்தை வெறும் அரசியற் கட்சிகளுடன் மட்டுப்படுத் தாது நாடு தழுவிய வகையில் எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், மதத்தலைவர்கள், சமூக சேவகர்கள், கலைஞர்கள் என இணைத்து இதனை ஒரு சமூக அரசியல் இயக்கமாக எழுச்சி பெறும் நிலையை ஏற்படுத்துதல் வேண்டும்.

தோழர் துரைரட்ணம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மூன்றாவது நாள் அமர்வு

கட்சியின் பிரதானமான அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பான தீர்மானங்கள்

1. அரசியல் அதிகாரப்பகிவு, மக்களாட்சியின் மறுமலர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி ஆகிய 3 விடயங்களும் எமது அரசியல் இயக்கத்துக்கான பிரதானமான விடயங்களாக அமைகின்றன. அத்தோடு சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, சமாதானம் ஆகிய இலட்சியங்கள் எமது அரசியல இயக்கத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பிரதிபலிப்பவையாக அமைந்திருககும்.

2. எமது தற்போதைய அரசியல் வேலைத்திட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாண மக்களை பிரதானமாக கொண்டிருந்தாலும் இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் வாழும் அனைத்து சிறுபான்மை தேசிய இனங்களினதும் ஜனநாயக உரிமைகளுக்காகவும் அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காகவும், அவர்களின் எதிர்கால முன்னேற்றத்திற்காகவும் குரலெழுப்ப வேண்டிய கடமையும் பொறுப்பும் எமது கட்சிக்கு உண்டு. எனவே, மலையகம், புத்தளம், நீர்கொழும்பு, கொழும்பு போன்ற இடங்களில் உள்ள தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள், தேவைகளை ஈடுசெய்யும் வகையில் செயற்திட்டங்களையும் நாம் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டும்.

3. எமது கட்சியானது ஒடுக்கப்படும், சுரண்டப்படும் பரந்துபட்ட பொது மக்களின் கட்சியாகும். இலங்கையில் ஒரு புரட்சிகரமான சமூக அரசியல் மாற்றம் தேவையென்பதில் அதை நோக்கிய முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர்கள் நாங்கள். அதற்கான பங்களிப்பில் எமது கட்சி ஒரு காத்திரமானதோர் பாத்திரத்தை வகிக்க வேண்டும். அதற்குரியவகையில் தென்னிலங்கையில உள்ள சரியான இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளுடனும் உண்மையான ஜனநாயக சக்திகளுடனும் நாம் அரசியல் ரீதியான கூட்டுறவையும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளையும் வளர்த்துக்கொள்வோம். அதற்குரியதான ஒவ்வொரு செயற்பாடுகளிலும் நாம் ஈடுபாடு கொள்வோம்.

4. எமது கட்சியானது பரந்துபட்ட மக்களின் நலன்களை இலட்சியமாகக கொண்ட கட்சியாக இருப்பினும் எமது கட்சி ஒரு தனிக்குழுவாத ("ஏக தலைமை", "ஏகபிரதிநிதித்துவம்", "நாம் மட்டுமே சரியானவர்கள்" போன்ற) போக்கினை கடைப்பிடிக்கமாட்டாது மாறாக முதலாவது கட்டமாக தமிழர்கள் மத்தியில் உள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயற்படுவது என்ற அடிப்படையில் நாமும் மூத்த அரசியல் தலைவரான திரு ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியும், திரு சித்தார்த்தன் அவர்களின் தலைமையில் செயற்பட்டு வரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் ஓர் அரசியல் புரிதலின் அடிப்படையில் இணைந்து ஜனநாயக தமிழ் ஜனநாயக தேசிய கூட்டணி என ஐக்கியப்பட்டுள்ளோம் அவ் அமைப்பை தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பாகவும் பதிவுசெய்து கொண்டுள்ளோம். இக்கூட்டமைப்பானது இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பல்வேறு அரசியல் சமூக சக்திகளையும் இணைத்து ஓர் பரந்து விரிந்த அரசியல் சக்தியாக வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் எமது பங்களிப்பையும் முடிந்தளவு செலுத்தி வருகின்றோம். தொடர்ந்தும் செயலாற்றுவோம்.

5. எமது கட்சியானது தமிழகத்திலும், டெல்லியிலும் பெருந்தொகையான நண்பர்களைக் கொண்ட ஒரு கட்சியாகும் இந்த நட்பானது முன்னர் சில அரசியல் கட்சிகளுடனும் பெருந்தொகையான எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், சட்டவல்லுனர்கள் மறறும் கலைஞர்களென விரிவாகவே இருந்தது. இவற்றை நாம் முறையாகத் திரட்டுவோமானால் எமது கட்சிக்கு தமிழகம் உட்பட இந்தியாவில ஒரு பெரும் அரசியல் சக்தி மிகுந்த ஆதரவை நாம் கொண்டிருக்கும் வாய்ப்பு உண்டு. அவற்றைக் கவனத்தில் கொண்டு எமது வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும். இந்தியாவின் நட்புறவும் தமிழக மக்களின் ஆதரவும் இந்திய மற்றும் தமிழக அரசாங்கங்களின் உதவிகளும் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வதற்கும் தமிழர்களுக்கு ஓர் நல்வாழ்வு கிடைப்பதற்கும் மிக அவசியமானவைகளாகும் என்பதனை எமது கட்சியானது கடந்த 25 ஆண்டுகளாக தெரிவித்து வந்திருக்கிறது. அதற்காக அபாண்டமான பழிகளையும், அவமானங்களையும் சந்தித்து வந்திருக்கிறது. பல நூற்றுக்கணக்கான தோழர்களை தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கிறது இந்த அரசியல் நிலைப்பாடு அப்போதும், இப்போதும், எப்போதும் சரியானதென உறுதியாக கருதுவதன் அடிப்படையில் தொடர்ந்தும் அந்த நிலைப்பாட்டை விடாது நாம் முன்னெடுப்போம். ●

அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் குறைந்த பட்சம் கணிசமான அளவு பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் கொண்ட கட்சி மாநாட்டை நோக்கி முன்னேறுதல் வேண்டும். அதற்குரிய வகையில் தற்போது கட்சியில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களையும் முறைப்படுத்துதல் கட்சியோடு தொடர்பிலிருக்கும் பழைய உறுப்பினர்கள், கட்சியின் தீவிரமான ஆதரவாளர்களுடனான மற்றும் புதிய தலைமுறையினரிலிருந்தும் உறுப்பினர்களை திரட்டும் நடவடிக்கைகளை இலங்கையிலும், வெளிநாடுகளிலும், தமிழகத்திலும் மேற்கொள்ளுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கைகளை அலட்சியப்படுத்திவிட முடியாது

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு பற்றியும் அவர்களின் நலன் சார்ந்த விடயங்கள் பற்றியும் முன்னணி தொழிற்சங்கங்களான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்டத் தொழிற்சங்க கூட்டமைப்பு - முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தம் இந்த மார்ச் 2009 இறுதியில் முடிவுக்கு வருகிறது.

இந்த ஒப்பந்தத்தில் பல்வேறு சரத்துக்கள் உளடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த செங்கொடி சங்க பொதுச் செயலாளர் ஓ.ஏ. இராமையா இந்த சரத்துக்களில் சம்பள உயர்வு சம்பந்தமான விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது குறிப்பிடத்தக்கது என்றார். மேலும் அவர் இந்த நாட்டின் பிரதான ஏற்றுமதி வர்த்தகத்தில் பெருந்தோட்டத் துறை முக்கியமானது. இதில் தொழிலாளர்களின் சம்பளம் பற்றிய பிரச்சினை மார்ச் 2009 முடிவுக்கு வரவேண்டும் ஆனால் இந்த ஒப்பந்தம் 2006ம் ஆண்டு காலாவதியாகி விட்டது. அதற்குப் பதிலாக புதிய ஒப்பந்தம் செய்யப்படவில்லை.

பிரதான கூட்டு ஒப்பந்தம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட போதிலும் இணக்கப்பாடு ஏற்படவில்லை. முதலாளிமார் சம்மேளனம் தற்போதைய பொருளாதார நெருக்கடி, சர்வதேச நிதி நெருக்கடிகளை காரணம் காட்டி தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விடயத்தில் இழுத்தடிப்பு செய்கிறது.

2007ம் ஆண்டு சம்பள உயர்வு பற்றிய ஒப்பந்தம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் தொழில் அமைச்சும் முன்னணி தொழிற்சங்கங்களுக்கும்- முதலாளிமார் சம்மேளனமும் இணைந்து பேச்சுவார்த்தை மேற்கொண்டவின் ஒப்பந்தம் செய்து கொண்டன.

தற்போதைய காலகட்டத்தில் பணவீக்கம் அதிகரித்தும், வாழ்க்கை செலவும் அதிகரித்துள்ளது. ஆனால் வருமானம் குறைந்து விட்டது. தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைந்துள்ளது எனவே அவர்களுக்கான சம்பளமும் குறைந்துள்ளது.

வருடாந்தம் அரசாங்கம் வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு பற்றி கவனத்தில் கொள்ளப்படுகின்ற போது மேற்படி கூட்டு ஒப்பந்தத்தினால் தொழிலாளர்கள் தங்களின் சம்பள உயர்வுகள் பற்றி பேசவோ போராட்டம் நடத்தவோ முடியாதவாறு அந்த கூட்டு ஒப்பந்தத்தில் சரத்துக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலாளிகளை பொறுத்தமட்டில் இலங்கையில் பிரதான பொருட்களான தேயிலை, இறப்பர் ஏற்றுமதி பாதிப்பற்றுள்ளதாகவும், விலைகள் குறைந்துள்ளதாகவும் ஏற்றுமதி தேக்கமடைந்திருப்பதாகவும் கூறி தொழிலாளர்களின் சம்பளத்தை மட்டுப்படுத்துவதோடு அவர்களுக்கான சலுகைகளையம் படிப்படியாக குறைக்கின்றனர்.தற்போதைய பொருளாதார நெருக்கடியால் சம்பள உயர்வு சம்பந்தமாக முடிவு எடுக்க முடியாது என ஜனாதிபதி தெரிவித்ததாக உத்தியோகபற்றற்ற தகவல் தெரிவிக்கிறது.

தொழிலாளர்கள் தனித்துவமாக வாழவில்லை இவர்கள் இந்த நாட்டின் அரசியல் பொருளாதார விடயங்களில் சம்பந்தப்பட்டவர்கள் அவர்கள் தரப்பில உள்ள நியாயங்களின் அடிப்படையில்தான் தீர்மானங்கள் பற்றி சிந்திக்க வேண்டும். இந்த விடயத்தை பொறுத்தமட்டில் இந்த பொருளாதார நெருக்கடிக்கு தொழிலாளர்கள் காரணமல்ல என்பதை முதலாளிமார் சம்மேளனமும், அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேயிலை, இறப்பர் ஏற்றுமதியில் கூடிய இலாபம் கிடைத்த போது அது தொழிலாளர்களுக்கு கிட்டவில்லை அவற்றை முதலாளிமார் சம்மேளனமும், அரசு வரியாகவும் பெற்றுக் கொண்டன.

விலைவாசி உயர்வு நாளுக்குநாள் அதிகரித்த போதும் தொழிலாளர்களுக்கான சம்பள பற்றாக்குறை தொழிலாளர்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

வாழ்க்கை செலவு அதிகரிப்பு சம்பந்தப்பட்ட பொருட்களுக்கான வரிகளையும் குறைத்து தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வை பெற்றுத்தர வேண்டிய பொறுப்பு அரசுக்கும் உண்டு. இது குறித்து அரசும் முதலாளிமார் சம்மேளனமும் நியாயமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

புதிய சம்பள உயர்வு பற்றியும் தொழில் உரிமைகள் பற்றி ஒப்பந்தம் செய்து கொளளப்படும் போது அரச அனுசரணையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த சம்பள உயர்வு பிரச்சினையில் தனிப்பட்ட குறுகிய நலன்களுக்காக பல்வேறு அமைப்புக்கள் தொழிலாளர்களை திசை திருப்பும் போக்கை காணக் கூடியதாக உள்ளது. சில அமைப்புக்கள் இந்த கூட்டு ஒப்பந்தம் தொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்கின்றனர். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் இவ்வாறு ஒப்பந்தம் செய்யபடாமல் இருந்திருந்தால் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்கின்றனர். எது எப்படி இருந்தபோதிலும் தங்கள் தொழிற்சங்கங்களின் நலன்களுக்கு அப்பால் தொழிலாளர்களின் நலன்களுக்காக தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும் ஒன்றிணைந்து தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். சம்பள உயர்வை பெற்றுக கொள்வதற்கு இரு தரப்பினரிடையே ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டுமா அல்லது அவ்வாறு ஒப்பந்தமொன்று செய்துககொள்ளப்பட தேவையில்லையா என்பதை தொழிலாளர் நலன் சார்ந்து செயற்படுவதாக தெரிவிக்கும் தொழிற்சங்கங்கள் உறுதியான முடிவை மேற்கொள்ள வேண்டும்

அத்தோடு உலகளாவிய அளவில ஏற்பட்டிருக்கும் நெருக்கடி இலங்கையையும் பாரியளவில் பாதிக்கக்கூடிய அபாயம் உண்டு என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். இந்நிலையில் மலையக தொழிலாளர் வர்க்கம் பலிகடாவாக்கப்படும் நிலையை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. எனவே முன்கூட்டியே மலையக தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களை பாதுகாக்க மலையக அரசியல் தலைமைகளும், தொழிற்சங்க தலைமைகளும் விழிப்புடன் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.–குமரன்–

அரசியல் மன்று பதில்கள்

தா. தவராஜா, வவனியா.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களால் நடாத்தப்பட்டுவரும் கவனஈர்ப்புப் போராட்டங்கள், ஊர்வலங்கள் பற்றி?

லண்டனில் வதியும் நண்பர் ஒருவரிடம் 'நீங்கள் அவற்றில் பங்குபற்றினீர்களா?' என நான் கேட்டதற்கு அவர் அளித்த பதில் :

"முல்லைத்தீவின் ஒரு குறுகிய பகுதிக்குள் சிக்குப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கானோர், ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் எறிகணை வீச்சுகளாலும், தமக்கு விரும்பிய பாதுகாப்பான இடங்களுக்கு தமது இஷ்டப்படி செல்லமுடியாதவாறு புலிகளால் தடுக்கப்படுவதாலும் சொல்லொணா இன்னல்களுக்கும், உயிர்ச்சேதங்களுக்கும் நாளாந்தம் ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். உலகநாடுகளின் அனுதாபப் பார்வையை இந்த அவலநிலையின்பால் திருப்புவது அவசியமே. இந்த நிகழ்சிகளின் ஏற்பாட்டாளர் ஒருவரிடம், 'நான் இரு கொடிகளைத் தூக்கி வர விரும்புகிறேன் : ஒரு கையில், 'ஸ்ரீலங்கா அரசே! பொதுமக்களைப் பாதிக்கும் எறிகணைகளை நிறுத்து!", மற்றைக் கையில், "புலிகளே! பொதுமக்களை தாம் விரும்பும் இடங்களுக்குச் செல்ல விடு!" என்றும். விடுவீர்களா?' என நான் கேட்டதற்கு அவர் சொன்னார் "அதெல்லாம் முடியாது!"

தமிழர்களின் நியாயமான போராட்டங்களெல்லாம், புலிகளின் பினாமிகளால், புலிகளின் இருப்புக்கு முண்டுகொடுக்கும் பிரச்சாரங்களாக திசை திருப்பப்பட்டு, அவற்றின் தார்மீகம் சாகடிக்கப்பட்டு, மக்கள் சக்தி அநியாயமாக வீணடிக்கப்படுகிறது. இதனால்தான், தொடர்ந்தும் உலகநாடுகள் அசிரத்தையாக இருக்கின்றன : தொடர்ந்தும் மக்கள் இன்னல்களில் மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ம. திருலோகநாதன், கொழும்பு.

இலங்கை இனப்பிரச்னை சம்பந்தமாக சர்வதேச நாடுகளின் தற்போதைய உத்தியோகபூர்வமான நிலைப்பாடு என்ன?

(1) இலங்கை அரசு யுத்தத்தை நிறுத்த வேண்டும் ;

(2) புலிகள் தங்களது பயங்கரவாத நடவடிக்கைளை நிறுத்தி ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் ;

(3) தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்கள் வெளியேற புலிகள் அனுமதிக்க வேண்டும் ;

(4) வெளியேறும் மக்களின் அடிப்படை நலன்கள் சர்வதேச மனிதஉரிமை விதிகளுக்கமைய உறுதிப்படுத்தப்படல் வேண்டும் ;

(5) ஒன்று பட்ட இலங்கைக்குள், அங்கு வாழும் சகல சமூகத்தினரதும் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலான அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகள் மூலம் எய்தப்படல் வேண்டும்.

அ. வரதராஜன், மட்டக்களப்பு.

"எமது ஆயுதங்கள் எமது அரசியல் போராட்டத்தின் கருவிகள் மட்டுமன்றி, அவையே எமது மக்களின் பாது காப்பு கவசங்களும்" என புலிகளின் அரசியல்துறைத் தலைவர் பா. நடேசன் ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறாரே?

பாவம் பா. நடேசன்! என்ன செய்வது என்று தெரியாத திண்டாட்டத்தினால் அவ்வப்போது கோமாளித்தனமான நேர்காணல்கள் கொடுத்தும், அறிக்கைகள் விட்டுக் கொண்டும் இருக்கிறார். அந்தக் கருவிகளின் துஷ்பிரயோகத்தால்தான் நியாயமான கருத்துக்கள் நசுக்கப்பட்டு, தமிழ் மக்கள் மந்தைகள்போல் அடக்கி ஒடுக்கப்பட்டு அவலங்களுக்குள் உள்ளாக்கப்பட்டதோடு, இன்று தமிழ் மண்ணின் சகல பகுதிகளிலும் இராணுவமுகாம்கள் வியாபித்து நிலைகொண்டிருக்கின்றன என்பதுதானே நாம் காணும் நிதர்சனம்! மேலும், புலிகளோ அவர்களது ஆயுதங்களோ மக்களுக்கு கவசங்கள் அல்ல, மக்களைத்தான் புலிகள் தங்கள் கவசங்களாகப் பாவிக்கிறார்கள் என்ற உண்மை எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்து விட்டதே!

கிளிநொச்சியை விட்டு புலிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வெளியேற்றப்படும்போது, ஆயுதங்களையும் தங்களுடன் எடுத்துச் சென்று விட்டார்கள் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. இப்பொழுதான் தெரிகிறது - அவர்கள் அப்படி எடுத்துச் சென்ற ஆயுதங்களில் அப்பாவிப் பொதுமக்களும் உள்ளடக்கம் என்று! இதில் என்ன வீரம் வேறு வேண்டிக் கிடக்கிறது!!

மு. ஜெயசீலன், திருகோணமலை.

திருகோணமலையில் ஆறு வயதுச் சிறுமி வத்சா கப்பத்திற்காகக் கடத்தப்பட்டு கோரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளாரே?

இத்தகைய கொடூரங்களைத் தயவுதாட்சணயமின்றி செய்யக் கூடிய மனநோயாளிகள் மத்தியில் நாம் வாழ்கிறோம் என நினைக்கும்பொழுது பயமாக இருக்கிறது! இவர்கள்தானா விடுதலைப் போராளிகள் என்ற பெயரில் வலம் வந்தவர்கள் என நினைக்க பிரமிப்பாக இருக்கிறது!! இத்தகையோரை உருவாக்கிய அமைப்பை, இவர்கள் வந்த வழியை எண்ணும்போது அருவருப்பாக இருக்கிறது!!!

த. அந்தோனிப்பிள்ளை, மன்னார்.

புலிகளின் விமானங்களில் சென்று கொழும்பில் தற்கொலைத் தாக்குதல்களில் ஈடுபட்டு உயிர்ப்பலியாகிய இருவர் பற்றி?

அவர்கள் தங்களது விமானங்களைச் செலுத்துவதற்கு - அதுவும் அரசபடைகளின் கண்காணிப்புகளிலிருந்து தப்பி லாவகமாக செலுத்துவதற்கு – எவ்வளவோ பயிற்சியும் அதற்கான அறிவும், திறமையும் வேண்டும். இவற்றினைத் தன்னகத்தே கொண்ட இரு உன்னதமான உயிர்கள் அநியாயமாக, எதுவித பலனுமற்ற பணிகளில் வீணடிக்கப்பட்டு விட்டது வேதனையை அளிக்கும் விடயம்.

தி. விநாயமூர்த்தி, யாழ்ப்பாணம்.

முல்லைத்தீவின் ஒரு சிறு பகுதியில் தற்போது முடக்கப்பட்டிருக்கும் புலிகளை அங்கிருந்தும் ஸ்ரீலங்கா இராணுவம் விரட்டிவிட்டால்?

'அங்கிருந்து புலிகளை இராணுவம் விரட்ட முடியாது திணறுகிறார்கள், அங்கிருந்து கொண்டே தமது எல்லைகளைப் புலிகள் மறுபடியும் பழைய நிலைமைக்கு விஸ்தரிப்பார்கள்' என ஏமாற்றுப் பிரச்சாரங்கள் செய்யும் புலி ஊடகங்களும், பினாமிகளும், தங்கள் பேச்சை மாற்றி, 'புலிகள் கொரில்லா முறையில் போராட்டத்தை தொடர்வார்கள்' என்று கூறிப் பிரச்சாரம் செய்வார்கள் : அதற்காகப் பணம் வேண்டும் என்று புலம்பெயர்ந்தோரிடம் [illegible] சாதகமான சாக்காக வைத்து, 'புலிகள் இன்னமும் முற்றாக முறியடிக்கப்படவில்லை' எனக் கூறி இலங்கை அரசு தமிழ்மண்ணில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தை தொடர்ந்தும் நிலைகொள்ளச் செய்வார்கள் : தொடர்ந்தும் தமிழ்ப் பொதுமக்கள் உயிர்,உடமைச் சேதங்களுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் ஆளாவார்கள். – யதார்த்தங்களையும், அனுபவங்களையும் கருத்தில் கொண்டு புலிகள் போரைத் தொடர்வதைத் தமிழர்கள் தடுத்து நிறுத்தாவிட்டால், என்றுமே நிவர்த்தி செய்ய முடியாத பேரழிவுகளையே மேன்மேலும் தமிழ்மக்கள் சந்திக்க வேண்டி வரும் என்பது திண்ணம்.

லோ. இந்திரகுமார், வெள்ளவத்தை.

'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வித்தியாதரன் ஸ்ரீலங்கா இரகசிய பொலிசாரால் கைது செய்தது பற்றி?

யாரோடு, எப்போ, எந்த அளவிற்கு உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற வித்தை தெரிந்தவர் அவர் எப்படித் திடீரென இக் கதிக்கு ஆளானார் என்பது தெரியவில்லை. என்னதான் இருந்தாலும், நம் மத்தியில் இடம்பெற்ற பல படுகொலைகள், கைதுகள், கடத்தல்கள், காணாமற்போன சம்பவங்களுக்கு சாட்சி அவர். வரி விளம்பரம் அளவிற்கேனும் அவற்றை பதிவு செய்ய காரணமாய் இருந்தவர். எங்களது கருத்து உரிமை குறித்து அவர் கண்டுகொள்வதில்லை. ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் எவருக்கும் அவரது கைதும், கைது செய்யப்பட்ட விதமும் ஏற்புடையதல்ல.

பா. புவனேஸ்வரன், லண்டன்

'வணங்கா மண்' என்று பெயரிடப்பட்ட ஒரு கப்பல் மூலம், இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்புவதற்காக லண்டனில் ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். உண்மையா?

மனித அவலங்கள் ஏற்படும்போதெல்லாம் எப்படிச் சிலர் அவற்றினைப் 'பணம் பண்ணுவதற்கு' வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது! 'சுனாமி' அனர்த்தம்போது அதனால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ என்று நிறையப் பணம் திரட்டப்பட்டது. அப்பணம் என்னவாயிற்று என்று தெரியாது! சமீபத்தில், ஈழத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ எனக் 'கண்ணீர்த் துளிகள்' என்ற பெயரில் பணம் திரட்டப்பட்டது எனக் கேள்விப்பட்டேன் அப்பணம் என்னவாயிற்று என்று தெரியாது! இப்பொழுது 'வணங்கா மண்'!- பெயரிலேயே பிரச்சார நெடி மூக்கைத் துளைக்கிறதே! - கப்பல் விடுவதற்குப் பணம் வேண்டும் என்றும் ஒரு பெரிய தொகை திரட்டுகிறார்கள் எனக் கேள்விப்பட்டேன்.

'வணங்கா மண்' என்ற பெயருடன், ஸ்ரீலங்கா அரசு உதவி செய்யவில்லை என்று கோரிச் சேகரிக்கப்படும் பொருட்களை ஸ்ரீலங்கா அரசையும் மீறி எப்படிக் கரை சேர்க்கப் போகிறார்கள்? அவற்றினை எப்படி விநியோகம் செய்யப் போகிறார்கள்? - இத்தகையோரை நம்பும் கேணையர்கள் இருக்கும் வரை அவர்கள் காட்டில் பண மழைதான்!- அநியாயம் சொல்லக் கூடாது : மக்களின் அவலங்களையும் அறியாமையையும் இனஉணர்வையும் மூலதனங்களாக வைத்துப் பிழைக்கத் தெரிந்த தொழில் முனைவர்கள் (entrepreneurs) இவர்கள்! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறும் மக்கள் மீது சூடு, தற்கொலை தாக்குதல் யுத்தத்தில் சிக்கி மடியும், அவதியுறும் மக்களின் படங்களை காட்டி ஆதாயம்

வன்னி வாழ் மக்களின் குழந்தைகள் பேரணியாக ஒரு வேளை கஞ்சிக்காக முகாம்களில் வரிசையில் நிற்கும் வேளையில் அந்த மக்களை கஞ்சிக் கலயத்தோடு நிற்க வைத்திருக்கும் தேசியத் தலைவரின் படங்களோடு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் குழந்தைகள் தேசிய தலைவரையும் புலிகளையும் அங்கீகரிக்க கோரும் பேரணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

சமாதான காலத்தில் பொறுத்தது போதும் பொங்கியெழு தலைவா, போருக்கு ஆணையிடு என்று பேரணிகளில் ஈடுபட்டு சமாதானத்தை கெடுத்ததுடன் சமபலம் பற்றி பேசிய புலிகளை இன்று நிபந்தனையற்ற யுத்தநிறுத்தம் கோரும் அவலத்துக்குள் தள்ளியது போன்று இப்போது வெளிநாடுகளில் இடம்பெறும் கவன ஈர்ப்பு பேரணிகளும், அங்கீகார பேரணிகளும் வண்ணியில யுத்தப்பிரதேசத்தில் சிக்கியுள்ள மக்களின் உயிருக்கு உலைவைக்கும் பேரணிகளாகவே அமையும்.

யுத்தப்பிரதேசத்தில் அகப்பட்டிருக்கும் மக்கள பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச் செல்வதற்கு புலிகள் அனுமதிக்க வேண்டும் என கோரி பேரணிகளை நடாத்தி முல்லைத்தீவில் தாக்குதல்களுக்கு உள்ளாகி உயிரிழந்தும், காயமடைந்தும் வரும் மக்களை பாதுகாப்பதற்கு பதிலாக அந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற விடாமல் தடுத்தும், கட்டுப்பாடுகளை மீறி வெளியேறும் மக்கள் மீது தாக்குதல் நடாத்தி கொன்றும், அச்சுறுத்தி தமக்கு கேடயமாக பயன்படுத்தி வரும் புலிகளின் பாதகச் செயல்களை அங்கீகரிக்கும் பேரணிகளாகவே வெளிநாடுகளில் நடாத்தப்படும் அங்கீகார பேரணிகள் அமைந்துள்ளன. இதனை வெளிநாடுகளில் நடமாடும் சுதந்திரம், கருத்து சுதந்திரம், என்பவற்றை அனுபவித்தபடி பாதுகாப்பான சூழலில் வாழும் தமிழ் சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கங்காரு குட்டிகளை சுமப்பதுபோல் தமது குழந்தைகளை கங்காரு நாட்டு பேரணியில் செல்லும் போது பொத்தி எடுத்துச் செல்லும் தமிழ் பெற்றோர்கள் வன்னியில் பேராபத்திற்குள்

சிக்கியிருக்கும் வன்னி மக்களின் குழந்தைகள், சிறுவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறி செல்ல புலிகள் அனுமதிக்க வேண்டும் என கோருவார்களா?

1996 இல் யாழ் குடாநாடு இராணுவத்தினரால கைப்பற்றப்பட்ட போது இலங்கை இராணுவம், அட்டூழியம் செய்யும், உங்கள் பெண் பிள்ளைகளின் கற்பை சூறையாடும், படுகொலைகள் புரியும் என பீதியூட்டி ஏமாற்றி தம்மோடு வன்னிக்கு அழைத்துச் சென்றார்கள். சிறிது காலத்தில் அவர்களையே எல்லை படை, துணைப்படை என்று கட்டாய வேலையில் ஈடுபடுத்தினார்கள். பின்னர் அவர்களின் பிள்ளைகளுக்கும் பலவந்தமாக குறுகிய கால ஆயுதப்பயிற்சியை வழங்கி ஆயுதங்களை அவர்கள் கைகளில் திணித்து போர்முனைகளில் முன் அரங்குகளில் காவல் பணிபுரிய நிர்ப்பந்தித்தனர். மிக குறுகிய காலத்திலேயே மாவீரர் என்ற வெறும் பட்டத்தோடு தமது பிள்ளைகளை சடலமாக கையேற்கும் கையறு நிலைக்கு அந்த பெற்றோர் தள்ளப்பட்டனர்.

இந்த கொடுமைகள் அனைத்தையும் மிஞ்சும வகையில் 1996 இலும் 2000 ஆம் ஆண்டும் பாதுகாப்பு வழங்குவதாக கூறி அழைத்துச் சென்ற மக்களையே தம்மை பாதுகாத்துக்கொள்ள கேடயங்களாக்கி வைத்திருப்பதுடன் உயிரை பாதுகாக்க எண்ணி தப்பிச் செல்ல முற்படும் அந்த மக்கள் மீது தாக்குதல் நடாத்தி கொல்லும அக்கிரமத்தையும் காவல் தெய்வங்கள் என்று தங்களை தாங்களே அழைத்துக் கொண்ட புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு தடைவிதித்து மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு தப்பிச் செல்ல முடியாமல் செய்து அவர்களின் அவலங்களுக்கு காரணமான புலிகளே உயிரிழந்தவர்களதும், காயமடைந்தவர்களதும் படங்களை காட்டி அரசியல் ஆதாயம் தேடியும் வருகின்றன. இத்தகைய ஒரு இரட்டை வேடத்திற்கு தமிழ் சமூகத்தில் தவிர வேறெந்த சமூகத்திலும் இடம் கிடைக்குமா என்பதற்கு விடை தேட முயல்வோமாக. ●

மார்ச் 2009 இல் லண்டன் பேரணியில் கூட்டமைப்பு எம்.பி சிவாஜிலிங்கம்
யூன் 2005 இல் ஊர்காவற்துறை பேரணியில் கூட்டமைப்பு எம்பிக்கள் சிவநேசன், பத்மினி

வலம்புரி 28.06.2005

பொறுத்ததுபோதும் பொங்கியெழு தலைவா!

தீவக மக்கள், தலைவர் பிரபாவுக்கு மனு

ஊர்காவற்துறையில் 27.06.2005 இல் சமாதானத்தை நிராகரித்து யுத்தத்தை வலியுறுத்தி மக்களின் பேரால் புலிகள் நடாத்திய பேரணியில் பிரபாகரனின் படத்துடன் ஒரு தாயும், மாணவிகளும்

அப்பாவி மக்களை.....

01ம் பக்கத் தொடர்ச்சி

இராணுவத்தினரின் அளவுக்கு மீறிய உறசாகம் நிச்சயமாக ஒரு காரணமாக இருக்காது.

அக்டோபர் 24ம் தேதிக்கும் நவம்பர் 09ம் தேதிக்கும் இடைப்பட்ட இரு வார யுத்தத்தில் எட்டு பொது மக்கள் இறந்தும் ஒன்பது பேர் காயப்பட்டும் உள்ளனர். ஆனால் கடந்த வாரத்தில் மட்டும் 288 பேர் இறந்தும் 766 பேர் படுகாயமடைந்தும் உள்ளனர். கடந்த சனிக்கிழமை 55 பேர் இறந்தும் 109 பேர் காயப்பட்டும் உள்ளனர். இது ஓர் அதிர்ச்சி தரும விடயம் மட்டுமல்ல. தாக்கப்பட்டவர்களையும், காயப்பட்டவர்களையும் விடுதலைப் புலிகளின் பிரதேசத்திலிருந்து தப்பியோடி வருபவர்களையும் நன்றாக பராமரிக்கும் இராணுவத்தினருக்கு அவப்பெயர் ஏற்படுத்துவது பாரதூரமான விடயமாகும்பல ஆண்டுகளாக பல்வேறு துன்பத்தை அனுபவித்து குறிப்பாக கடந்த சில மாதங்களாக செல் அடிக்கும், பீரங்கி தாக்குதலுக்கும் பயந்து வாழும மக்களின் நம்பிக்கையை பெற இத்தகைய படுகொலைகளை நிறுத்த வேண்டும்.

இராணுவம் இனி விமானத் தாக்குதலைகளை உடனடியாக நிறுத்தி பீரங்கித் தாக்குதல் செல் தாக்குதல்களையும் நிறுத்த வேண்டும். அகப்பட்டுள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேறும் வரை எஞ்சியுள்ள பகுதிகளை பிடிப்பதைப் பொறுத்திருக்கலாம். ஆனால் இராணுவ நடவடிக்கை தொடரலாம்.

விடுதலைப் புலிகள் தமது பிரச்சாரத்துக்கு பெரிதாக பாவித்த குற்றச்சாட்டாகிய இன ஒழிப்பை மறுத்துரைத்தவன் நான் என்பதை தாங்கள் அறிவீர்கள் என்று அவர் தனது கடிதத்தை முடித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வேதனையை புரிந்துகொள்வார்களா?

மாவிலாற்றில் தொடங்கிய படையினரின் இராணுவநடவடிக்கை முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பையும் தாண்டி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. வன்னிப் பகுதில் புலிகளின் நிர்வாக இயந்திரம் முற்றாக முடக்கப்பட்டுவிட்டது. படையினரின் மரணத்தாக்குதல் மூலம் புலிகளின் பெரும் பகுதிகள் கைமாற்றப் பட்டாலும் அங்குள்ள மக்களின் பாதுகாப்பு மிகவும் மோசமானதாகவே உள்ளது. யானைகள் மோதிக் கொண்டால் எறும்புகள்தான் மிதிபட்டு சாகும் என்ற நிலையில்தான் பொதுமக்களும் போரின் நடுவே சிக்கி பலர் உயிரிழக்கிறார்கள், படுகாயமடைகிறார்கள் அரசின் கணக்கின் படி சுமார் 75ஆயிரம் மக்கள் இங்கு இருப்பதாக கூறினாலும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அங்கு வாழ்வதாக தெரிவிக்கின்றன.

வன்னியில் இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் சுமார் 60 ஆயிரம் சிறுவர்களின் கல்வி பாதிக்கப் பட்டுள்ளதாக யுனிசெவ் தெரிவிக்கிறது.

இருதரப்பினருக்கும் இடையில் இடம் பெறும் யுத்தத்தினால் மோதல் பகுதியில் சிக்கியுள்ள மக்களின் உயிருக்கு மேலும் ஆபத்து ஏற்படக்கூடிய அச்சம் தற்போது மேலும் அதிகரித்துள்ளதாகவும், சனநெருக்கம் காரணமாக நீர் மற்றும் சுகாதார குறைபாடு காரணமாக தொற்றுநோய் ஆபத்தை மக்கள் எதிர் கொள்வதாக ஐ.சி.ஆர்.சி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

யுத்தம் நடைபெறும் பகுதிகளில் பொது மக்களின் பாதுகாப்பு குறித்து விசேட கவனம செலுத்த வேண்டும் எனவும் அவ்வாறில்லாவிட்டால் புலிகளின் பாதுகாப்பு கேடயங்களாக பொதுமக்கள் பயன்படுத்தப்படுவர் என பிரிட்டன் கன்சவேர்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் பதில் வெளிவிவகார அமைச்சருமான லியாம் பொக்ஸ் கூறியுள்ளார். புலிகள் தமது பகுதியில் சிக்குண்ட மக்களை கேடயங்களாக பயன் படுத்துவதாக எழுந்த குறறச்சாட்டை அடுத்தே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். இவர் விடயத்தில் அரசாங்கம் பொறுப்புணர்ந்து செயல் படுவது அவசியமாகும். ஏனெனில் புலிகள் தமது தோல்வி நிச்சயம் என்று தெரிந்து கொண்ட பின்னரும் கூட அங்குள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெறியேறுவதறகு அனுமதிக்கவில்லை. அவ்வாறு வெளியேறும் மக்கள் மீது குடு நடத்துவதிலும் தற்கொலை தாககுதல், கிளைமோர் தாக்குதல் நடத்துவதிலேயே அவர்கள் குறியாக இருக்கிறார்கள் இவ்வாறு தப்பி வரும் பொதுமக்கள மீது புலிகள் நடத்திய தாக்குதல்களினால் பல பொதுமக்கள் இறந்தும், காயமடைந்துமுள்ளார்கள் அத்துடன் அப்பகுதியில் இருந்து வெளியேற முயற்சிக்கும் மக்களுக்கு புலிகள் மரண அச்சுறுத்தல் விடுப்பதாக இங்கிருந்து தப்பி வரும் பொது மக்கள் கூறுகின்றனர்.

புலிகள் இத்தகைய போர் விதிமுறைகளுக்கு முரணாக செயல்பாடுகளை விடுத்து அங்கு சிக்குண்டிருக்கும் பொது மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும் என ஐ.நா வும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன், இந்தியா உள்ளிட்ட நாடுகளும் சர்வதேச மனிதஉரிமை கண்காணிப்பகம் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புக்களும் இடையறாது வலியுறுத்திவருகின்றன.

அங்குள்ள தமிழமக்கள் கொல்லப்படுவதன மூலம் சர்வதேச நாடுகளினது அதுவும் ஐ.நா, வின் கவனத்தை ஈர்ப்பதற்கும், புலம் பெயர் வாழ் தமிழ் மக்களின் அனுதாபத்தை பெறுவதற்கும் தமது இறுதி இருப்பை தற்காத்துக் கொள்வதுமே அவர்களது இறுதிக்கட்ட திட்டமாக உள்ளது. புலிகளின் இவ்வாறான மனிதநேயமற்ற நடவடிக்கையை இங்கிருக்கும் தமிழ்மக்களும், புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்மக்களும் சர்வதேச சமூகமும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

வன்னி மீதான பெரும்போர் நடவடிக்கைக்கு புலிகளின் மனித நேயமற்ற செயற்பாடே காரணமாகும். சோவியத் ஒன்றியத்தின் மீது ஹிட்லர் மேற்கொண்ட படையெடுப்பே அவனது வீழ்ச்சிக்கு காரணமானது போன்று மாவிலாற்றை புலிகள் மூடியமையே அவர்களது தோல்விக்கு அத்திவாரமிட்டது. மூவின மக்களும் விவசாயத்திற்காக பயன் படுத்தும் இவ் ஆற்றை திறந்து விடுமாறு அரசாங்கம் உட்பட பல்வேறு தரப்புகள் விடுத்த கோரிக்கையை புலிகள் நிராகரித்தமையே இந்த நிலைமைக்கு காரணமாகும். ஆற்றைத் திறந்து விடுமாறு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் புலிகளைகோரிய போதும் புலிகள் அதனை நிராகரித்ததுடன் இது குறித்து தம்முடன பேசக்கூடாது எனவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எச்சரித்துள்ளனர். இதனை அவர்கள் நெருங்கிய நண்பரிடம் சொல்லி வருந்தியிருக்கிறார்கள்.

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போராட்டத்தை நடத்திவரும் விடுதலைப்புலிகள் தமிழ் மக்களுக்காக என்ன விமோசனத்தை பெற்றுக் கொடுத்துள்ளார்கள் என்ற வினா எல்லோர் மத்திலும் தற்போது எழுகிறது.

ஈழவிடுதலைக்காக ஆரம்பத்தில் போராட புறப்பட்ட சக இயக்கங்களை தடைசெய்தார்கள் அவ் இயக்கப் போராளிகள் பலரை தெருத்தெருவாக சுட்டும் உயிருடனும் எரித்தார்கள். தம்மை தாமே ஏகப் பிரதிநிதி என்று கூறி வீரமுழக்கம் இட்டார்கள். அதன் விளைவாக தமது இயக்கத்தைச் சேர்நத சுமார் 25 ஆயிரம் இளைஞர், யுவதிகளை அர்த்தமற்ற யுத்தத்தின் மூலம் பலிக்கடா ஆக்கினார்கள். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் உயிரிழப்பிற்கும், பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்தழிவிற்கும் காரணமாக இருந்தார்கள்.

தமிழ் மக்களுக்காக போராடுகிறோம் என்று கூறிக்கொண்டு அவர்கள் மீது சர்வாதிகார ஆட்சி நடத்தினார்கள். ஹிட்லர் யூத மக்களுக்கு விரோதமாக செயற்பட்டது போன்று சகோதர முஸ்லீம் மக்களை வடக்கிலிருந்து வெளியேற்றியதையும் அவர்களின உடைமைகளை அபகரித்ததையும் நாம் மறந்திருக்க முடியாது. அதுமட்டுமின்றி போராட்டத்திற்கென கூறி தமிழ் மக்களிட மிருந்து சொத்துக்களையும், பணத்தையும் வரியாகவும், கப்பமாகவும் பல வருடங்களாகவே சூறையாடினார்கள். அப்படிப் பெறப்பட்ட பணத்தில் புலிகள போராட்டம் நடத்தவில்லை. மாறாக புலி தலைமைகள் சுகபோக வாழ்கையை அனுபவித்தமை தெரிந்ததே. தற்போது படையினரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் அவர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள் என்பது அம்பலமாகியிருக்கிறது.

1987ம் ஆண்டு ஏற்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையை புலிகள் ஏறிமிதித்தார்கள். நான்காவது வல்லரசோடு போரிட்டு வென்றதாக கூறி பெருமையடித்துக் கொண்டார்கள். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை தற்கொலைத் தாக்குதல் மூலம் கொலை செய்தார்கள் இதனால் இந்தியாவின் பகையை தேடிக்கொண்டார்கள்.

2002ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் நோர்வேயின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு கிழக்கு இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் அரசியல் நடத்த வந்த புலிகள் அங்கு தமது அரசியல் சாணக்கியத்தையோ, நோ்மையையோ காட்டவில்லை மாறாக மாற்று அரசியல் கட்சி உறுப்பினர்களையும், அவர்களின் ஆதரவாளர்களை கொல்வதிலும் படையினர் மீது தாக்குதல் நடத்துவதிலுமே குறியாக இருந்தார்கள். ஏ-9 பாதையூடாக வரு



பவர்களிடம் வரியாக பெரும் தொகை பணத்தை அள்ளினார்கள். இக்காலப் பகுதியில் அதிகளவு யுத்த நிறுத்த மீறல்களை புலிகள் மேற்கொண்டார்கள் என்ற சர்வதேச அங்கீகாரத்தை பெற்றார்கள். இதனால் சர்வதேசத்தின் ஆதரவை புலிகள் இழந்தார்கள். இவ்வாறு பொதுமக்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், மாற்று இயக்கத் தலைவர்கள், அரசியல்வாதிகள் ஆகி யோரை கொலை செய்து தமிழ் மக்களுக்கு பெரும் தீங்கிழைத்தார்கள்.

இவ்வாறு புலிகளின் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தற்போது ஓரளவிற்கு விடுபட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு அரசாங்கம் விடிவுப்பாதையை ஏற்படுத்தித் தரவேண்டும். இதற்கு தென்னிலங்கை அரசியல் கட்சிகள் ஆதரவுக்கரம் நீட்டவேண்டும். ஏனெனில் அண்மையில் இந்தியாவிற்குச சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் "தமிழ் மக்களுக்கு பொருத்தமான தீர்வு ஒன்றை முன்வைத்தாகவும் ஆனால் அப்போது இருந்த எதிர்கட்சிகள் அதனை கடுமையாக எதிர்த்ததால் தான் அதிலிருந்து விலகிக்கொண்டதாகவும், இந்நிகழ்வே ஆட்சிக்கு வரும் எல்லாத் தலைவர்களுக்கும கடந்த காலத்தில் ஏற்பட்டது. இதனால் அவர்கள் தமிழர்களின் பிரச்சனையை தீர்ப்பதில் அக்கறை காட்டவில்லை" எனவும் தெரிவித்தார்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி ஆட்சியில் இத்தகைய வரலாற்றுத்தவறு இடம் பெறக் கூடாதென்று நியாயமாக சிந்திக்கும் தமிழ் மக்களின் விருப்பமாகும். தீர்வை விரும்பும் சகல அரசியல் சக்திகளுடனும் அரசாங்கம் பேச்சுகள் நடத்தி பொருத்தமான தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள் ஆகும்.

யாழிலிருந்து ரஞ்சன்

நிலவரம்



வழி பிறக்குமா?

பூநகரி கைப்பற்றப்பட்டதுடன் ஏ 32 பாதை படையினின் கட்டுப்பாட்டில் வந்தது. பூநகரி 'கைப்பற்றப்பட்டது தமிழ்மக்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. விரைவில் பொதுமக்களின் போக்குவரத்திற்கு பூநகரி பாதை திறக்கப்படும் என குடாநாட்டு மக்கள் எதிர்பார்த்து காத்திருந்தனர். இதன் பின்னர் மிக விரைவிலேயே ஏ-9 பாதையையும் படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். பொதுமக்கள் இந்த வீதியூடாக பயணம் செய்ய முடியும் என்ற உறுதிமொழிகள் பல்வேறு தரப்பினராலும் வழங்கப்பட்டன ஆனால் இன்றுவரை தரைப்பாதை எதுவும் பொதுமக்களின் போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட வில்லை.

பொதுமக்கள் போக்குவரத்து செய்வதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டாலே யாழ் குடாநாட்டில் அத்தியாவசிய பொருட்களை நியாயவிலையில் பெற முடியும். குடாநாட்டு விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களுக்கும். மீனவர்கள் தமது கடல் உணவுகளுக்கும் சந்தைவாய்ப்பையும் உற்பத்தி செலவுகளை ஈடுகட்டக் கூடிய நியாயமான விலையும் கிடைக்கும்.

வன்னியில் காயமடைந்த மக்களை ஏற்றிவருவதற்காக யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் சேவையில் ஈடுடுத்தப்பட்ட கப்பல் பயன்படுத்தப்படுவதால் யாழ் செல்லும் பயணிகள் பலநாட்களாக திருகோணமலையில் காத்திருக்கும் நிலை தோன்றியுள்ளது. யாழ் கொழும்பு பயணிகள் விமான சேவையில் 25 நாள்கள் வரை பயணச்சீட்டுக்கள் கிடைக்காது என தெரிவிக்கப்படுகின்றது. இதனால், புதுவருடத்திற்காக யாழ்ப்பாணம் செல்ல திட்டமிட்டிருந்தவர்கள் அவ்வாறு செல்ல முடியாத நிலையிலிருப்பதாக தெரிவிக்கின்றனர். நெருக்கடி நிலையை தவிர்ப்பதற்கு பொருட்களை எடுத்துச் செல்வதற்கான முயறசிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது போன்று புதுவருடத்திற்கு முன்னதாக ஏ-9 பாதைவழியாக பயணிகளையும் அழைத்துச்செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வேண்டுகோள்கள் விடுக்கப்படுகின்றது.

குறையுமா விலை?

இதுவரை காலமும் 1750 முதல் 2300 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட 50 கிலோ நிறையுடைய சீமெந்து பொதி ஒன்றின் விலை 1100 ரூபாவாக குறைந்திருக்கின்றது. யாழ் மாவட்ட செயலகம் 50 கிலோ சீமெந்து பொதி ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 1600 ரூபா என அறிவித்திருந்த போதும் கடல்வழியாக கொண்டுவருவதால் சீமெந்தை அதிகரித்த விலைக்கு விற்க வேண்டியிருப்பதாக கூறி 1750 ரூபாவிற்கு தனியார் கடைகளில் சீமெந்து விற்பனை செய்யப்பட்டது ஆனால் இப்போது சீமெந்து தரைவழிப் பாதை ஊடாக எடுத்து வரப்படாமலே 1100 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவது எவ்வாறு? யாழ் மாவட்ட செயலகம் கட்டுப்பாட்டு விலை 1600 ரூபாவாக நிர்ணயித்தது ஏன்? என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். இதுவரை காலமும் 1750 முதல் 2300 ரூபா வரை சீமெந்து விற்கப்பட்ட பணம் யாருடைய சட்டைப்பையை போய் சேர்ந்தது என மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது? யாழ் மாவட்ட விசேட செயலணிக்குழுவும் கூட ஏன் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவில்லை என விடயமறிந்தவர்கள் கேட்கின்றனர்.

அண்மையில் தரைவழிப்பாதை ஊடாக எடுத்து வரப்பட்ட பொருட்களும் நியாயமான விலைக்கு மக்களுக்கு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்கம் குறைந்த விலையில் பொது மக்களுக்கு பொருட்கள் போய் சேர வேண்டும் என்ற நோக்கில் பொருட்களை தரைவழிப்பாதை ஊடாக எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் இவ்வாறு எழுத்துச் செல்லப்பட்ட தோடம்பழம், அப்பிள் ஆகியன 85 ரூபாவிலிருந்து 90 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டது. அன்னாசிப்பழம் ஒன்று 250 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது. கொழும்பு விலையை விடவும் ஒரு மடங்கு அதிக விலையில் இந்த பழங்கள் விற்பனை செய்யப்பட்டால் தரை வழி பாதை ஊடாக பொருட்களை எடுத்து வருவதில் மக்களுக்கு என்ன பயன் என வினாவி [illegible] ஏகபோகம் தான் இந்த விலை அதிகரிப்பிற்கு காரணம் எனவும் வெவ்வேறு தனியார் வியாபாரிகளுக்கும் இந்த அனுமதி வழங்கப்பட்டால் வியாபாரத்தில் போட்டி அதிகரித்து நுகர்வோருக்கு நன்மைகள் கிடைக்க வாய்ப்பு உண்டு என வர்த்தகர்களே தெரிவிக்கின்றனர். எனவே எதிர்காலத்திலாவது பொருட்கள் எடுத்துச் செல்லப்படும் போது இந்த விடயங்களை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

நலன்புரி நிலையம் ?

வன்னியில் யுத்தம் இடம்பெறும் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வரும் மக்கள் யாழ் மாவட்டத்தில் கோப்பாய், மிருசுவில், கொடிகாமம், குருநகர், கைதடி ஆகிய இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களின உணவு உட்பட அத்தியாவசிய தேவைகளை யாழ் மாவட்ட அரசாங்க செயலகமும் அத்துடன் அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்களும மேற்கொள்வதால் எல்லா இடங்களிலும் ஒரு சீர்த் தன்மையோடு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் காதில் விழுகின்றன. பொது நிறுவனங்களாலும், அரசசார்பற்ற நிறுவனங்களாலும வழங்கப்படும் பொருட்கள் - மரக்கறி வகைகள், குழந்தைகளுக்கான பால்மா, உடுபிடவைகள் போன்றவை - எல்லா இடங்களுக்கும் கிடைப்பதில்லை. என கூறப்படுகின்றது.

சகல நலன்புரி நிலையங்களிலும் பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் இருந்தாலும் சில இடங்களில் அவர்கள பாடசாலைக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் இன்னமும் செய்துகொடுக்கப்படவில்லை. அத்துடன் அவர்களுக்கான கொப்பி, புத்தகங்கள், சீருடைகள என்பனவும் முழுமையாக கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோப்பாய், மிருசுவில் ஆகிய இடங்களில் சிறு, சிறு குழுக்களாக சேர்ந்து உணவு சமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. விரைவில் அனைவருக்கும் உலர் உணவுகளை வழங்கி தனித்தனியே சமைத்து உண்பதற்கு உரிய வழிவகைகள் செய்யப்படுவது அவசியமாகும்..

யாழ் நகரில் நீண்ட காலமாக போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்த ஸ்ரான்லி வீதி முழுமையாக இருவழி போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. வெலிங்டன் சந்தியிலிருந்து நாவலர் வீதி வரை செல்லும் மணிக்கூட்டு வீதியும் போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி வதியிலிருந்து ஆரியகுளம சந்திவரை செல்லும் பருத்தித்துறை வீதி ஊடாகவும் சைக்கிள், மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகளில் போக்குவரத்து செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நினைவு கூர்கிறோம்

தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கான போராட்டத்திற்கு தம்மை அர்ப்பணித்து ஏப்ரல் மாதத்தில் உயிர் நீத்த தோழர்கள் இவர்கள். அவர்களின் உழைப்புக்களும், தியாகங்களும் வீண்போகாது அவர்களது பணிகளையும், நம்பிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத்தோழர்களுக்கு எமது அஞ்சலியை செலுத்தி நினைவு கூருகின்றோம்.

முழுப்பெயர்	கட்சி பெயர்	முகவரி	இறந்த திகதி	இறந்த இடம்
பஸ்ரியம்பிள்ளை கோடீஸ்வரன்	கடாபி	பலாலி சந்தி	03.04.1986	கடல்
பரமநாதன் உதயச்சந்திரன்	பாஸ்கரன்	இராமநாதபுரம்	02.04.1988	கிளிநொச்சி
மயில்வாகனம் செல்வரூபன்	மோகன்	தர்மபுரம்	02.04.1988	
அன்ரன் மரியதாஸ்	அன்ரன்	பெருமாள்கோவிலடி	25.04.1985	ஒட்டுமடம்
இராஜேந்திரா இராஜகாந்தன்	ஈசன்	ஆணைப்பந்தி	23.04.1985	ஒட்டுமடம்
அருமத்துரை சந்திரசேகரம்	சந்திரன்	பலாலி	03.04.1986	கடல்
	ராகவன்		03.04.1989	உசன்
	சந்திரன்	மானிப்பாய்	03.04.1989	உசன்
	காந்தன்	சாவகச்சேரி	03.04.1989	உசன்
பொன்னம்பலம் மோகனதாஸ்		சாவகச்சேரி	03.04.1989	உசன்
	மோகன்	இயக்கச்சி	03.04.1989	உசன்
	சுரேஸ்	புன்னாலைக்கட்டுவன்	09.04.1989	உசன்
	சுரேஸ்	நாரந்தனை	03.04.1989	உசன்
வேலுப்பிள்ளை சண்முகநாதன்	ஜோசப்	நுணாவில் மேற்கு,	25.04.1987	சாவகச்சேரி
மயில்வாகனம் செல்வரூபன்	மோகன்	தர்மபுரம்	02.04.1988	கிளிநொச்சி
பரமநாதன் உதயச்சந்திரன்	பாஸ்கரன்	இராமநாதபுரம்	02.04.1988	கணேசபுரம்
வேலுப்பிள்ளை மனோகரன்		வட்டக்கட்சி	30.04.1986	புத்தூர்
	அருள்ஜோதி	புத்தூர்	20.04.1988	புத்தூர்
	ரட்ணா	அச்சுவேலி	06.04.1989	வல்வெட்டித்துறை
	குமார்	அச்சுவேலி	10.04.1989	தொண்டமனாறு
	முரளி	தொண்டமனாறு	10.04.1989	கடல்
	ஜெராட்	ஊறணி	03.04.1988	
செல்லத்துரை ரவீந்திரன்		மருதனார்மடம்	12.04.1990	மயிலிட்டி
வேலன் தனபாலசிங்கம்		மல்லாகம்	12.04.1990	கல்வயல்
சின்னத்தம்பி சிறிவிக்ததாஸ்		மட்டுவில் கிழக்கு	26.04.1990	கீரிமலை
இ.உதயகுமார்	வினோகரன்	பலாலி	03.04.1986	
சூ.அல்போன்ஸ்	அமீன்	வளலாய்	17.04.1986	கொக்குவில்
	ரெஜி	கோண்டாவில்	21.04.1985	கொக்குவில்
	கரன்		21.04.1985	மிருசுவில்
வேலன் செல்வராசா	அண்ணாமலை	மந்துவில்	03.04.1989	மிருசுவில்
சிறிதரன்	சிறி	கொடிகாமம்	03.04.1989	மிருசுவில்
	மோகன்	இயக்கச்சி	03.04.1989	
எம். சிவராசா	காந்தன்	மாவடிவேம்பு	1989.04.25	
ஜே. விக்கினேஸ்வரமூர்த்தி	விக்கி	மாவடிவேம்பு	1989.04.25	
	கணேஸ்	நாவலடி	1989.04.25	
பதிரட்ணம்	பதி	புதுக்குடியிருப்பு	1988.04.20	
ஏ. தனசேகரன்	பிரதீப்	ஏறாவூர்	1988.04.14	
ஏ. தவராஜா	தவம்	பாண்டிருப்பு	1987.04.28	
வி. சிவபாலன்	உதயன்	வந்தாறுமூலை	1987.04.27	
கே. அமிர்தலிங்கம்	வெல்லாவெட்டி	மகிழூர் மண்டூர்	1987.04.26	
எஸ். சந்திரன்		களுதாவளை	1987.04.20	
பி. வன்னியசிங்கம்	வன்னி	களுதாவளை	1987.04.18	
எம். கந்தசாமி	கணேஸ்	மண்டூர்	1987.04.13	
	அல்பிறட்	புதூர்	1987.04.11	
வி. சிவக்குமார்	வண்டையா	காரைதீவு	1987.04.04	
பி. சிவகணேசமூர்த்தி	சதா	திருக்கோவில்	1987.04.00	
பி. ஏகம்பராஜா	பார்த்தீபன்	அக்கரைப்பற்று	1987.04.00	
ரி. சகாயநாதன்	நாதன்	ஆரையம்பதி	1986.04.24	
	குமார்	மண்டூர்,	1986.04.23	
எஸ். இராசநாயகம்	சேகர்	கல்முனை - 03	1986.04.06	
என். இளங்கோ	ரஞ்சித்	களுவாஞ்சிக் குடி	1986.04.03	
எஸ். மோகனராஜா	சலீம்	காரைதீவு	1985.04.21	
என். கந்தசாமி	நாகேஸ்	தம்பிலுவில்	1985.04.14	
கே. கணேஸ்.	நித்தி	காரைதீவு - 02	1985.04.14	
ஆர். சண்முகநாதன்	கந்தசாமி	திருகோணமலை	1986.04.03	
ரி. சிறிஸ்கந்தராசா	கடாபி	திருகோணமலை	1986.04.03	
ஏ. தர்மலிங்கம்	தாஸ்	சாம்பமூர்த்தி லேன்	1986.04.03	
ஏ. தாமராஜ்	சுரேஸ்	திருகோணமலை	1986.04.03	
செல்வதுரை உதயகுமார்	பீற்றர்	கந்தளாய்	1985.04.05	
நாதன்	சாரங்கன்	இசைமாலைத்தாழ்வு	1988.04.06	
ஞானசீலன்	தங்கேஸ்	ஆவனம்	1988.04.06	
	சில்வா	சூரியகட்டைக்காடு	1988.04.06	
	ரவி	முருங்கன்	1988.04.06	
வவா	சிவா	முருங்கன்	1988.04.06	
வேதநாயகம் பத்திமநாயகம்	ஐயா	கன்னாட்டி	1988.04.06	

தோழர் பீற்றர்

தோழர் ஐயா

தோழர் ஜோசப்

தோழர் சாரங்கன்

தோழர் அண்ணாமலை


தோழர் தங்கேஸ்

தோழர் ரஞ்சித்

தோழர் கடாபி

தோழர் சந்திரன்

தோழர் கடாபி

தோழர் கந்தசாமி

தோழர் ஜராட்

இம் மாதத்தில் உயிர் நீத்தவர்களில் எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர்விபரங்களை இங்கு பிரசுரித்துள்ளோம். இங்கு பிரசுரிக்க தவறிய தோழர்கள் பற்றிய விபரங்கள் தெரிந்திருந்தால் அவற்றை அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொள்வதுடன் இங்கு நினைவு கூரப்பட்ட தோழர்களின விபரங்களை பூரணப்படுத்துவதற்கும் அவர்களது படங்கள் அவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் அவற்றை எமக்கு அனுப்பி உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு எதிர் கிழக்கு

யஹையா வாஸித்

பத்தாவது முறை தடுக்கி விழுந்தவனை பூமித்தாய் முத்தமிட்டு சொன்னாள். மகனே ஏற்கனவே ஒன்பது முறை தடுக்கி விழுந்தவனல்லவா நீ. டோன்ட் வொறி புறப்படு. அது போல்தான் எங்கள் தலைவர் தடுக்கி விழுந்துள்ளார். வீறுகொண்டெழுவர் என புலி ஆதரவாளர்கள் சொல்லிக் கொண்டு தவமிருக்கின்றனர். நிச்சயமாக தலைவர் எழும்ப வேண்டும் நிதானமாக முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதுதான் எமது பிரார்த்தனையும். அப்போதுதான் நடக்க இருப்பவை நல்லதாகவே நடக்கும். நான் கிழக்கு மாகாண மக்களுக்கு என எழுதிவரும் கட்டுரைகளைப் பார்த்து விட்டு பலர் பலவிதமான அபிபிராயங்களை தெரிவித்திருந்தனர். சிலது. சரி மொத்த யாழ்ப்பாணிக்கும் ஒரு காக்கா வைக்கிறான்டா ஆப்பு என சந்தோஷப்பட்டும், இன்னும் பலர் நாங்க என்ன கிழக்கு மாகாணத்தவர்கள் எண்டா சும்மாவா எங்களுக்கும் எல்லாம் தெரியும் என்பதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு என்றும், இன்னும் சிலர் இதைப் பார்க்கும் போது யாழ்ப்பாண அந்த செந்நிற இரு வாட்டி மண்ணும் ஒரு காலத்தில் சளைத்ததல்ல என்றும் தூது விட்டிருந்தனர்.

தரப்படுத்தல் என்ற ஒன்று வந்ததனால் தான் கிழக்கு மாகாண மொத்த மக்களும் நன்மை அடைந்தார்கள் என்பதை முதலில் கிழக்கு மாகாணத்தவர்கள் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணி 3ஏ.1பீ எடுத்து பீஎஸ்ஸி போக தடுமாறிய போது கிழக்கு மாகாணத்தவர்கள் 3சீ மட்டுமே எடுத்து மெடிக்கல் கொலேஜ் போக வைத்த புண்ணியம் இந்த தரப்படுத்தல் என்ற வைரசுக்கு உண்டு. இப்போது வீட்டுக்கு ஒரு டாக்குத்தர் தெருவுக்கு நாலு இன்ஜீனியர், கூப்பிட்ட குரலுக்கு எக்கவுண்டன். தடுக்கி விழுந்தால் டபுள் மெட்ஸ் ரீச்சர், என்ட புள்ள சவுதில கெமிக்கல் இன்ஜினியர், அவன் மச்சான் இப்ப நாசாவில வேலை செய்கின்றான் மச்சான் என்று கிழக்கு மாகாண மககள் பீத்திக் கொள்வதற்கு முழு முதற் காரணம் இந்த யாழ்ப்பாணிகளே.

யாழ்ப்பாணி யாழ்ப்பாணிக்கு ஏசுவான், பேசுவான் அதில் தலையிட நமக்கு எந்த உரிமையும் கிடையாது. அவர்களுக்குள் சைவ, வெள்ளாள என்று தொடங்கி பல ஆயிரம் "வடு"க்கள் இருக்கின்றது. அதில் தலையிட எமக்கு எந்த உரிமையும் கிடையாது. அதற்குரிய தகுதியும் எமக்கு இல்லை. அது அவர்களின் உள் வீட்டுப் பிரச்சனை. சக்களததிச் சண்டை சமாதானம் ஆகிவிடுவார்கள் சமரசம் செய்து கொள்வார்கள். பரம்பரைச் சண்டையல்ல இது. நாளைக்கே சமாதானம் ஆகிவிடுவார்கள். இப்போது சைவ வெள்ளாளருக்கு திட்டும் அனைவரும் அவன்ட ஆங்கில கிறித்துவ மிஷனறியில ரியுஷன் எடுத்தவர்கள்தான்.

ஆரோக்கியமாக எல்லோரும் அரசியல் செய்தவர்கள்தான். இந்திய "ரோ" வந்து அவர்களை கண்டந் துண்டமாக சாமியாட வைத்து விட்டது. எனது இஸ்லாம் சமயத்தில் சிலை வணக்கம், சாமி கும்பிடுவது என்பன தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கு அனுமதி இருக்குமானால், என்னைப் படைத்த அல்லாஹ், என்னைப் பெற்றெடுத்த தாய்க்கு அடுத்ததாக ஒவ்வொரு யாழ்ப்பாணியின் காலடி மண்ணெடுத்து சாம்பலாக்கி என் உடம்பெல்லாம் பூசி தில்லையம்பலத்தானுடன தத்தோம். தத்தோம். தித்தோம், தரிகிடதோம் என சாமி ஆடியிருப்பேன்.

அங்கே நிறைய படிக்க இருக்கிறது சகோதரர்களே. நாம் கடுகளவை வைத்துக் கொண்டு குதிக்க வேண்டியதில்லை. அங்கே உலகளவு சரக்கிருக்கிறது. நானும் விபரம் புரியாமல் "பனங்கொட்டை சூப்பி"கள் எனத் திட்டியவன் தான். நான் அங்கே திட்டின போது அவன் பனங்கொட்டையை பிளந்து சைக்கிளுக்கு "டைனமோ" மோட்டார் பைக்கிற்கு எரிபொருள் என அதை மாற்றிக் கொண்டிருந்தான் நண்பர்களே. யாழ் வெலிங்டன் தியேட்டர் அச்சகத்தடியில் செட்டிக்கு தண்ணி தெளித்தெதிலிருந்து மட்டக்களப்பில் நாக படைக்கு (வாசு தேவன், வாம தேவன்) அவர்கள் பாலூற்றிய போதெல்லாம் கிட்ட இருந்து பார்த்தவன், சாண்டோ சங்கரதாஸ் என்கின்ற மட்டக்களப்பு இரும்பு மனிதனின் தாய்வழி மாமாவிடம் நம்ம அரசியல் ஆய்வாளர் சிவராம் இங்கிலீசு படித்த (இந்த அரசியல் சரிப்பட்டு வராதுப்பா) காலத்திலிருந்து போன வாரம் வேம்படி மகளிர் மகா வித்தியாலய இரண்டாவது பில்டிங், இரண்டாவது மாடியில் இரண்டு மேசைகளை அடுக்கி ஏறி நின்று சீனைப் பரால் குறிபார்த்து ஈ.பி.ஆர்.எல்.எப். சுபத்திரனை எய்ம் வைத்தது வரை புரோட்டன். நியூத்திரன், இலத்திரன் அளவு இல்லா விட்டாலும் அணுவிலும அணுவளவு கிட்ட இருந்து பார்த்தவன் அன்பர்களே.

சோனிகளின் தடங்களைப் புரட்டிப் பார்.அங்கே யுத்த சாயல்கள்தான் வீசும் என ஒரு சோனிக்காக்கா எழுதி இருந்தார். வாப்பா, தம்பி, மகனே முகம்மது நபி ஆடு வளர்த்தார், வியாபாரம் செய்தார், சக்காத் (தர்மம்)கொடுத்தார், நோன்பு (விரதம்) பிடித்தார், தியானம் செய்தார், மக்களை நன்மையின் பால் அழைத்தார் என முப்பது அத்தியாயங்கள் இருக்கிறதே வாப்பா. அதை படியுங்கோ வாப்பா.

பிளீஸ் நீங்கள் இப்போது தண்ணீரைத்தான் ஊற்றினாலும் அது அந்த மக்களுக்கு பெற்றோலாகத்தான் தெரியும். ஆறுதல், ஆறுதல் ஆறுதல் ஒன்றைத்தவிர வேறு எந்த ஒத்தடமும அந்த யாழ் புண்ணியவான்களுக்கு தேவையில்லை. இது முள்ளில் விழுந்த சேலை அவர்கள் ரொம்பசாதுரியமாக எடுத்துக் கொள்வார்ள். அவர்கள் பொறுமையின் கடல் நண்பர்களே. அவர்களின் தவங்களுக்கு முன்னால் நாம் நேற்று முளைத்த காளான்கள்.

யாழ் பொ. அம்பலவாணர் தொடங்கி கோண்டாவில் கிழக்கு வரையும், மெட்ராஸ் ஏ.வி.எம். ஸ்ருடியோ முதல் அண்ணாசாலை சாந்தி தியேட்டர் வரை என்னை இந்த மகா முட்டாளை சைக்கிள் கெரியரில் வைத்துக் கொண்டு வேர்க்க விறு விறுக்க சைக்கிள் உழக்கிய ஒரு யாழ்ப்பாணச்சியின் பிள்ளையிடம் கொஞ்ச நாள் வளர்ந்தவன் நான். யா அல்லா. நாற்பது தள பதிகள்,-ஆயிரத்தெட்டு எடுபிடிகள், பத்தாயிரம் பத்தாயிரமாக நோட்டுக் கட்டுகளுடன் சிறுசுகள் குதிக்கும் போது அந்த தலைவன் இவர்களுக்கு இரவு சாப்பாட்டுக்கு சாப்பாட்டு மூட்டை தூக்கிக் கொண்டிருந்தான். அவனைப் போல் பிள்ளைகளைப் பெற்ற பல லட்சம் யாழ்ப்பாணச்சிகளை பாதை திறக்காத போது இரண்டு வெள்ளையனுடன் வன்னிக்குள்ளால புஸ் பைக்கிளில் போய் தரிசித்திருக்கின்றேன்.

ஆம் இல்மனைட்டுக்கு விலை பேசப் போன காலமது. (அங்கேயும் காக்கா பிஸ்னசுக்குத்தான் போயிருக்கானா ?) அப்புறம் பாதை திறந்து இரண்டு மாதத்தில் ஒரு அந்தி சாயும் வேளை ரோட் குளோஸ். தம்பிகளின் செக்பொயின்ட்டுல நைட்டு நிற்கும் போது புல் தண்ணியில ஆய்வாளரும் (சாண்டோ சங்கரதாஸ் வீட்டு கொல்லையில ஒழித்த அதே சிவராம்) நின்றிருந்தார். வனனிக்குள்ள போய் "சைற்" எடுத்துப் போட்டு வாற நேரம் அது. அதற்கு நான்கு மாதத்துக்கப்புறம் தான் நம்ம சரிநிகரில்லாத அண்ணா (அப்பனே சிவ சிவா) "சைற்" எடுத்திருந்தார். கிளிநொச்சியில இப்போதைய பொலீஸ் பொறுப்பாளரின் புத்தகக் கடைக்கு முன்னால் உள்ள சாப்பாட்டுக் கடையே சரணம் அய்யப்பா.

கிழக்கு மாகாணத்தை பற்றியே எழுதிக் கொண்டிருக்கிறாரே எங்களிடமும் கடல் வளம் இருக்கு என "இராஜ் குமார்" குத்திக் காட்டியிருந்தார். இராஜ குமார் அண்ணா மயிலிட்டியில் இருந்து 14 ஹோஸ் பவர் இஞ்ஜின் பொருத்திய 18 அடி பைபர் கிளாஸ் போர்ட்டில் 70 நிமிடத்தில் வேளாங்கண்ணி போன அனுபவமும் உண்டண்ணா. வேலணை நாங்கள் பெண்ணெடுத்த ஊர் அண்ணா. கணவாயகறி எங்கட ராத்தாக்கள் சமைப்பதைவிட வேலணைக்காறியிண்ட கைபட்டால்தான் அதற்கு மவுசண்ணா. மன்னார் நானாட்டான் நாங்கள் எக்கவுண்ட்ஸ் ரியுஷன் கொடுத்த ஊர் அண்ணா. மன்னார் நறுவிலுக்குளம் நண்டை கொண்டுவந்து நீர்கொழும்பு "சன் றைஸ் ஹோட்டலில்" ஜப்பான் காறனுக்கு விலை பேசிய அனுபவமும் உண்டண்ணா. சும்மா ஊருல மாடுமேய்த்துக் கொண்டிருந்த என்னை கூட்டிக் கொண்டு போய் கொல்லும் தூரம், செல்லும் தூரம் எல்லாம் சொல்லித்தந்து (ஷோபாசக்தி மண்ணிப்பாராக) இப்போது சொல்லொணா பொதிகளைச் சுமக்க வைத்துப் போட்டாங் கண்ணா. அதனால இப்ப உங்களோட நாங்க ரொம்ப கோபமாக இருக்கிறோம் அண்ணா. நீங்க இந்த ஆயுத கலாச்சாரத்தை விட்டுட்டு வாங்கோண்ணா. அப்புறம் கோண்டாவில் புகையிலைக்கும், கொக்குவில் சுருட்டுக்கும் உலக சந்தையில் விலை பேசுவோம் அண்ணா (எனக்கு எழுத்தறிவித்த புன்னாலைக் கட்டுவன் சோதிலிங்கம் வாத்தியாருக்கே எல்லாப் புகழும் போய் சேரும்) அந்த மனுஷன் சொன்னான் டேய் நாசமறுவா மாட்டு சாணியை எருவாக்கலாம், அதனால் ஊது பத்தி செய்யலாம், காயவைத்து அடுப்பெரிக்கலாம், தோலை செருப்பு யாவாரிக்கு விக்கலாம், இறைச்சியை காக்காமாருக்கு விற்கலாம், முள்ளை சீனி வியாபாரிக்கு விற்கலாம். மொத்தமாக மாடு மேய்ப்பது நல்ல தொழில்டா என்று படிச்சி படிச்சி சொன்னான். ஹ்ம்ம்...

பாதை திறந்தவுடன் காசை கா சென்று பார்காமல் 11 லட்சம் ரூபா கொடுத்து வாங்கிய டொயாட்டா ஹைஏஸ் வேனில் இரண்டாவதாகப் போன அனுபவமும் உண்டண்ணா. நண்பருக்கு வாங்கிச் சென்ற மூன்று கேஷ் குக்கர்களில் ஒன்றைத் தண்டமாக கொடுத்து விட்டு இரண்டுக்கு ஐயாயிரம் ரூபா பைன் கட்டிய அனுபவமும் உண்டண்ணா. இடை வெளியில் குட்டிக் குட்டிப் பையன்களிடம் "இரண்டு ரூபாவுக்கு ஒரு கவளம் "பாலைப் பழம்" வாங்கித் தின்ற அனுபவமும் இனிக்குதண்ணா. வேனுக்குள்ள கிடந்த "கார்பட்"டை கிளிநொச்சியில் தாரைவார்த்த கதையைச் சொல்லி அழ நேரமில்லை போங்கண்ணா.

செக்குக்கும் சிவலிங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாத நான் ஐ.நா. உயர் அதிகாரிகளின் தாய். பிள்ளைகளுடன் சில, பல சமயம் ஈவினிங் பார்ட்டிகளில் கலக்க முடிகின்றது என்றால் அதற்கு முழு முதற்காரணம் எனக்கு வர்த்தகத்தை வரிக்கு வரி சொல்லித் தந்த அந்த தேவச்சந்திரன், அந்த வரதராசன் போன்ற பனங்கொட்டைகளையே சாரும்.(யாழ்ப்பாண மக்களே பிளீஸ் மன்னித்து விடுங்கள். உங்களை சந்தோஷமாகப் பாராட்ட வேறு வார்த்தைகள் இல்லை ஐயன்மீர்)

நன்றி- தேனீ

கந்தன் கருணையில் படுகொலை செய்யப்பட்ட தோழர்கள்

தோழர் ஈஸ்வரன்

தோழர் கதிர்

தோழர் மஜித்

தோழர் சின்னசெல்வம்

தோழர் பவான்

தோழர் தாசன்

தோழர் அன்பரசன்

கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரம் முழுமையாக வழங்கப்பட வேண்டும்

மாகாண சபைக்கு அதிகாரம் பெறுவதற்காக சகல தமிழ் கட்சிகளும் சகல தமிழ் மக்களும் பிரதிநிதிகளும் அயராது உழைக்கவேண்டும் இவ்வாறு பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இரா. துரைரெத்தினம் (ரட்ணம்) தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில் இலங்கையும் இந்தியாவும் செய்துகொண்ட ஒப்பந்தம் ஊடாகவே தமிழ் மக்களுக்காக மாகாணசபை உருவாக்கப்பட்டது.

விரும்பியோ, விரும்பாமலோ பல்வேறு நிர்ப்பந்தங்கள், சட்டம் சார்ந்த காரணிகளால் வடக்கு, கிழக்கு பிரிந்து கிழக்கு மாகாணசபை உருவாகியுள்ளது.

நெருக்கடிமிக்க இந்தக்காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் நலன் சார்ந்த அனைத்து கட்சிகளும் தங்களுக்குள் இருக்கும் முரண்பாடுகளை மறந்து கூட்டுச் சேர்ந்து அதிகார பரவலுக்கான தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அயராது உழைக்கவேண்டும்.

அதிகாரப் பரவலாக்கலுக்குரிய செயற்பாடுகள் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பேசப்பட்டுக் கொண்டு இருக்கும் இவ்வேளையில் நாம் நிதானமாகவும் பொறுப்புடனும் ஐக்கியமாகவும் செயற்பட வேண்டும்.

30 வருடங்களுக்கு மேலாக தமிழ பேசும் மக்கள் அனைத்தையும் இழந்த இந்த நிலையில் தமிழ் மக்களின் தலைமைகள் எனப்படுவன [illegible] டன் நடந்து கொள்ள வேண்டும் [illegible]

றுப்பற்ற அறிக்கைகளை விடுவதைத தவிர்த்து தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரபரவலாக்கலை வென்றெடுப்ப [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதுதை.....

12ம் பக்கத் தொடர்ச்சி

சூழ்நிலையிலும் துடிப்பாக கல்வியில் ஆர்வம் கொண்டிருக்கும் எமது இளைய தலைமுறைக்கு உற்சாகமூட்டி சரியான திசைவழி காட்ட வேண்டும். கல்வி கற்பதற்கான சூழல் எமது பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படுவது மிக மிக அவசரமானதும், அவசியமானதுமாகும்.இழப்புக்களால் நம்பிக்கையிழந்த மக்களின் மனங்களில் நம்பிக்கை கட்டியெழுப்பப்ப வேண்டும்

அகதி வாழ்க்கையால் அல்லல் பட்டு அரைகுறை வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டுள்ள எமது மக்களின் வாழ்ககைக்கு புத்துயிரளிக்கப்ப வேண்டும்

தமிழ் மக்கள் தமது பிரதேசங்களில் தமது அலுவல்களை தாமே பார்த்துக்கொள்ளும் அளவிற்கு உருப்படியான அரசியல் அதிகார கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதற்கு தமிழ் மக்களின் சகல ஜனநாயக அரசியல் சக்திகளும் இணைந்து செயல்பட வேண்டும்.

முடிவற்ற அவலக்கதை தொடராமல் முடிவுரை எழுதப்பட வேண்டும்.

வவுனியா-மன்னாரில்----

12ம் பக்கத் தொடர்ச்சி

க. சிவராஜா, ஞானதாஸ்-சிவம், குமார் ஆகியோரும் சந்தித்து நிலைமைகளை கேட்டறிந்தனர். மன்னார் ஆயர் வைத்தியசாலைக்கு வரும் காயமடைந்தவர்களுக்கு திருச்சபையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் உதவிப பணிகளை விபரித்தார். தொடர்ச்சியாக விரிவான அளவில் பணிகளை மேற்கொள்ள உள்ளதாகவும், ஊனமுற்றவர்களின் மறுவாழவிற்கென நிரந்தரமான ஏற்பாடுகளை செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தவிர பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் இன் பிரதிநிதிகள் மன்னார் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு தரப்பினரையும், ஊடக வியலாளர்கள் உட்பட சந்தித்து உரையாடினர்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் விதமாக அமைதி தீர்வொன்றை காண்பதற்கு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தையும் ஆண்டகை வலியுறுத்தினார்.

வணங்காமண் ?

வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களிடமிருந்து வன்னியில் யுத்தப் பிரதேசத்தில் சிக்கியுள்ள மக்களுக்கான உதவி என்ற பேரில் பொருட்கள் சேகரிக்கப்படுகின்றது. இந்த பொருட்களை வணங்கா மண் என்ற கப்பலில் ஏற்றி முல்லைத்தீவிற்கு அனுப்பி வைக்கப் போவதாக பெரும் எடுப்பில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. கப்பல் கட்டணத்திற்கென பணம் சேகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

புலிகளின் இணையத்தளங்களே இது தொடர்பான பிரச்சாரங்களில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. புலிகளின் தாக்குதல்கள் தொடர்பான செய்திகள எதுவும் இல்லாத நிலை யில் வெறும் வாய்க்கு அவலாக அங்கீகார பேரணிகளும், வணங்கா மண்களும் இணையத் தளங்களுக்கு அவசியமாக இருகின்றன. நிதி திரட்டுவதற்கான புலிகளின் உபாயங்கள் அனைத்தும் மக்களை மயக்கும் சக்தியற்றவையாய் ஆகிய நிலையில் புதிய கவர்ச்சியான உத்தியாக வணங்கா மண் ஆகியுள்ளது. இதனால் வன்னியில் அவலப் படும் மக்களுக்கு எந்தப் பயனும் விளையப் போவதில்லை.

யாழ் மாவட்டத்தில் பட்டினியால் வாடும் உடன் பிறப்புக்களின் துயர் துடைக்க ஒரு கோடி ரூபா பெறுமதியான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை படகுகள் மூலம் எடுத்து வந்து துன்பப்படும் மக்களின் துயர் துடைக்கப் போவதாக புலிகளின் தீவிர ஆதரவாளரான பழநெடுமாறன் அவர்கள் அறிவித்தார். கடந்த 12.09.2007 இல் தமிழ் நாகபட்டினம் கரையிலிருந்து அடையாளமாக யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை எடுத்துவரச் சென்ற பழநெடுமாறன் அவர்களும் அவரது ஆதரவாளர்களும் தமிழக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இலங்கை தமிழர்களுக்கு உதவ விரும்புகின்றோம் ஆனால், இது போன்ற நடவடிக்கைகள் அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். உத்தரவாதமில்லாத இந்தப் பயணத்தை மேற்கொள்ள நாங்கள் தயாரில்லை என படகோட்டிகளான மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை கைதான பழநெடுமாறன் அவர்களும் அவரது அமைப்பை சேர்ந்த சிலரும் பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதி தராவிடின் சாகும் வரை உண்ணாவிரதம் என அறிவித்தனர். உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட 3 நாட்களில் அவரது உடல் நிலை மோசமடையவே அவரது அரசியல் சகபாடிகள் பழரசம் வழங்கி அவரது உண்ணாவரதத்தை முடித்து வைத்தனர்.

உள்ளூரிலும் உலகநாடுகளிலும் நெருக்கடிகளை சந்தித்து அரசியல் ரீதியான எந்த ஒரு போராட்டத்தையும் முன்னெடுக்க முடியாத நிபையில் இருந்த புலிகளுக்கும் தமது இருப்புக்காக புலிகளுக்கு துதிபாடுபவர்களுக்கும், புலிகளின் வானொலிகள், தொலைக்காட்சிகள், பத்திரிகைகளுக்கும் மெல்ல அவல் கிடைத்ததேயன்றி யாழ் குடாநாட்டு மக்களுக்கு ஒரு படுக்கை தானும் கிடைக்காமலே நெடுமாறன் ஐயாவின் பயணம் முற்றுப் பெற்றது.

இறுதியில அந்த பொருட்களுக்கு என்ன நடந்தது என்பதை இந்த பிரச்சாரங்களை மேற்கொண்டவர்கள் கூட இன்று வரை தெரிவிக்கவில்லை.

ஆனால், புலி ஆதரவு தமிழக கட்சிகளின் கண்டனக் குரல்களுக்கு மத்தியில் அண்மையில் தமிழக முதல்வர் கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் ஊடாக கையளித்த பொருட்கள் வன்னியில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த பொருட்கள் வன்னிக்கு கொண்டுவரப்பட்டு தமக்கு வழங்கப்பட்டதை இப்போது வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்திருக்கும் மக்கள் நன்றியோடு நினைவு கூருகின்றனர். அண்மையில் முன்னாள முதல்வர் ஜெயலலிதா அல்லல்படும் மக்களின் துயர் துடைப்பதற்காக 2 கோடி ரூபாவை செஞ்சிலுவை சங்கத்திடம் கையளித்துள்ளார். வன்னி வாழ் மக்களின் துயரங்களில உண்மையான அக்கறை இருந்தால் வெளிநாடுகளில் வாழும் இலங்கை தமிழர்களும் இத்தகைய சட்டபூர்வமான வழிகளில் அல்லல் படும் மக்களுக்கு உதவ முன்வர வேண்டும் அதனை விடுத்து புலிகளின் பிரச்சாரத்திற்கும், வசூல் வேட்டைக்கும் கையாளும் உத்திகளால் ஏமாற்றப்பட்டு உங்கள் பணத்தை வீண் விரயமாக்காதீர்கள். முல்லைத்தீவிலும் இடம்பெயர்ந்து வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திலும் நலன்புரி நிலையங்களில் அல்லற்படும் மக்களுக்கு உதவ விரும்புபவர்கள் அந்த மக்கள் மத்தியில் நின்று அவர்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்து பணிபுரியும் நிறுவனங்கள், பொது அமைப்புக்களிடம் உங்கள் நிதிகளை கையளியுங்கள்.

கூடாரங்கள், மரங்களின் கீழே ஒதுங்கியுள்ள மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் பொருட்கள் கிடைக்க செய்ய வேணடுமே தவிர மத்தியானம் சமைத்த சோற்றை உணபதற்கு கறி இல்லையே என்று அங்க லாய்ப்பவர்களுக்கு. காலையில் ஒரு கோப்பை தேனீர் கிடைக்காதா என ஏங்கும் மக்களுக்கு நீங்கள் அனுப்பும் கோண ஃப்ளாக் பொதிகளும், போத்தலில் அடைக்கப்பட்ட பானங்களும், உங்கள் குழந்தைகளின் நொறுக்கு தீனிகளும் அவசியமா? அது மட்டுமல்ல அவை எப்போது வந்து சேரும் அல்லது வந்து சேர்வதற்கான சாத்தியம் தானும் உள்ளதா என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

புலிகள் வன்னியில் உள்ள மக்களுக்கு வெளிநாடுகளிலிருந்து கப்பலில் உணவுப்பொருட்களை கொண்டுவருவதற்கு முன்பாக மோதல் இடம பெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு, உணவு தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய இடங்களுக்கு செல்ல புலிகள் அனுமதிக்க வேண்டும்.

அரசாங்கம் வன்னி மக்களுக்கு அனுப்பும் உணவுப்பொருட்களை ஏற்றிச்செல்லும் கப்பல்கள் மீது புலிகள் தாக்குதல நடாத்துவதை நிறுத்த வேண்டும்.

இவற்றை விடுத்து வணங்கா மண் போன்ற பிரபல்யத்தை விரும்புபவர்களின் விளம்பரம் தேடும் நடவடிக்கைகளும், புலிகளின் பணம் பண்ணும் உத்திகளும் அவலப்படும் மக்களுக்கு என்ன பயன் விளைவிக்கும்? ●

மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கோரி பிரேரணை சபையில் முன் மொழிவு.

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் நீண்டகாலமாக கீழ் குறிப்பிடப்படும் வேலைகள் சில பூர்த்தி செய்யப்பட்டாமல் உள்ளது சில வேலைகள் நடைமுறையில் இருந்தும் பூர்த்தி செய்யப்படாமல் குறையாக உள்ளது. எனவே பின்வரும் வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு ஆணையை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதில் குறை குறையாக செய்யப்பட்ட பல வேலைகள் நிதி பற்றாக்குறை காரணமாகவும், ஆளணி பற்றாக்குறை கரணமாகவும் தாமதமடைகின்றன எனவே இவ் வேலைகளை மேற்கொள்வதற்கு மாநகர சபையில் வழி மொழிந்து தீர்மானமாக எடுத்து இதற்கான குழுக்களையும் அமைத்து மத்திய அரசு, மாகாண அரச நிறுவணங்கள், வெளிநாட்டு தூதுவராலயங்கள் உயர்ஸ்தானியர்கள் போன்றவர்களை சந்தித்து எமது வேலைகளை ஆரம்பிக்க எமது மாநகர சபை வழியமைக்க வேண்டும்.

இவ்வாறு பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி கட்சியின் உறுப்பினர்களும், மடடக்களப்பு மாநகரசபை உறுப்பினர்களுமான ம. சுதேந்திரன், செ. ஆசீர்வாதம் ஆகிய இருவரினால் கடந்த கடந்த 24-02-2009ம் ஆண்டு நடைபெற்ற மாநகர சபை மாதந்த பொதுக் கூட்டத்தில் அவர்களால் முனவைக்கப்பட்ட பிரேரணைகளை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டதுடன் விரைவாக மேற்கொள்ளக் கூடிய வேலைகளை உடன் நடை முறைப் படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. நிதி கூடிய வேலைத்திட்டங்களுக்கு முதல்வர் ஊடாக அரசிடம் அல்லது நிறுவனங்களிடம் நிதியை பெற்றுக்கொள்வது எனவும் தீர்மாணிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள்

1. வடிகால் அமைப்பதற்கான வரைபடம் எடுத்து சீரான வடிகால் அமைத்தல்.

2. வீதிகளுக்கு மின்சார இணைப்பைக் கொண்டு மின் விளக்குகள் அமைத்தல்.

3. கடற்கரைப்பகுதியான நொச்சிமுனை எல்லையிலிருந்து கொக்குவில மாநகரசபை எல்லை வரையும் வீதி அமைத்தலும் மின்சாரவசதி, தெருவிளக்கு அமைத்தல், பேருந்து போக்குவரத்துச் சேவை, இளைப்பாறும் இருக்கைகள் வியாபாரம் செய்ய கொட்டகைகள் அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

4. மயானங்களுக்கு வரைபடம் எல்லைகளை உறுதிப்படுத்தல், துப்பரவுசெய்தல், மின்சார வசதி ஏற்படுத்தல மயானக்காவலாளியை நியமித்தல், சுற்றுமதில் அமைத்தல் அல்லது வேலி அமைத்தல்.

5. மட்டककளப்பு நகரிலிருந்து திருப்பெருந்துறைக்கு செல்வதற்கு இயந்திரப்படகு சேவையை ஆரம்பித்தல்.

6. மாநகர சபையால் புலமைப்பரீட்சை திட்டத்தை ஆரம்பித்தல்.

7. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தை மாநகரசபை பொறுப்பேற்று இலவசமாக நடாத்த வழிவகைசெய்தல்.

8. மாநகர சபையில் கடமையாற்றும் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கு குழு அமைத்தல்.

9. மாநகர சபை எல்லைக்குள் மக்கள் தொகை அதிகரிப்பின் காரணமாக நீண்டகாலமாக வேலை செய்வதற்கு ஊழியர்கள், உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவி வருகிறது. இதில் எமது தேவைக்கேறப ஆளணியை [illegible] அதிகரித்துக்கொள்ளுதல் [illegible] காணியின் அபிவிருத்தி உறுதிப்படுத்தவும் நியமனம் செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுத்தல்.

10. நீண்டகாலமாக மட்டக்களப்பு பேருந்து நிலையம் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றது மக்களின் தேவைக்கேற்றவாறு பேருந்து நிலையம் அமைக்க உடனடி நடவடிக்கை எடுத்தல்.

11. மட்டக்களப்பு நகருக்கு உட்பட்ட வாவிகளுடாக படகு போக்குவரத்து சேவையை ஆரம்பித்தல்.

12. மாநகரசபைக்குட்பட்ட வாவிகள் அனைத்துக்கும் வாவிகளின் கரையோரமாக தடுப்புச்சுவர்கள் அமைத்து போக்குவரத்துக்கான நடைபாதையையும் அமைத்தல்.

13. மாநகரசபைக்குட்பட்ட எருமைத் தீவுக்கு போக்குவரத்து செய்வதற்கான பாலம் அல்லது நடைபாதை அமைத்தல்.

14. மாநகரசபைக்குட்பட்ட வீதிகளுக்கு வரலாற்றுப்பின்னணி கொண்ட பெயர்களை சூட்டுதலும், பெயர் பலகை அமைத்தலும்.

15. நுளம்புத் தொல்லையை நீக்கும் முகமாக மாதம் ஒரு தடவை தெளிமருந்து தெளித்தல்.

16. மாநகரசபைக்கு செலுத்தப்படாமல் இருக்கும் வரிகளை குறிப்பிட்ட மாதத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுத்தல்.

17. மாநகரசபை எல்லைக்குள் இருக்கின்ற அனுமதியற்ற செயற்பாடுகளை தடை செய்தல்.

18. ஒவ்வொரு பாடசாலை முன்பாகவும் வேகத் தடை அமைத்தலும், வீதிக்கடவை (மஞ்சள்கோடு- கடவை) அமைத்தல்.

19. [illegible] உறுதி முறையை குறைப்பதற்கு நட வடிக்கை எடுத்தல்.

20. தெருக்களிலும், காணிகளிலும், மழைக்காலங்களில் நீர் தேங்கி நிற்பதை தடுப்பதற்கான நடவடிக்கையை விரைவாக மேறகொள்ளல்.

21. போக்குவரத்து நெரிசலாக உள்ள வீதிகளுக்கு மேம்பாலம் அமைத்தல்.

இவ்வாறு மட்டு மாநகரசபை உறுப்பினர்களான சுதேந்திரன், ஆசீர்வாதம் ஆகிய இருவரும் மாநகரசபை முதல்வரிடம் கோரிக்கை விடுத்தனர். ●

பெயர் மாற்றம் பெற்ற குஞ்சுவாப்பா வழிபாட்டுத்தலம்

இலங்கைத்துறை முகத்துவாரம் எனும் ஊர் இங்கு சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். இது பரம்பரை பரம்பரையாக தமிழர்களின் பூர்வீக இடமாகத்தான் இருந்து வந்துள்ளது. இந்த பிரதேசம் ஆறும் கடலும் சேர்வதால் முகத்துவாரம் என்று அழைப்பதுண்டு. கடலோரப்பகுதியில் குஞ்சுவாப்பா எனும் கோயில் இருந்துள்ளது. அப்பகுதி வாழ் தமிழ் மக்களின் வழிபாட்டு தலமாகவும் இருந்தது. இப்பகுதி மாவிலாறு பிரச்சினைக்குப் பின்னர் இராணுவத்தால் மீட்கப்பட்டு பின் அந்த ஊர் லங்காபட்டுன என பெயர் மாற்றப்பட்டு விகாரையும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் வாழ்கின்ற மக்களின் பிரதான தொழில் மீன்பிடியாகும். தற்போது இவர்களின் அன்றாட தொழிலுக்கும் பாதுகாப்புக் காரணங்களால் தொடர்ந்து செல்ல முடியாமல் உள்ளது. இவ்வூர் மக்களின் தொழிலை தொடர்ச்சியாக செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு இவ்வூர் மக்கள் கேட்கின்றார்கள்.

திருமலை சிவம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வன்னி மக்களை புலிகள் கேடயங்களாக வைத்திருப்பதைவிட்டு ஐ.நா அமெரிக்கா, பிரிட்டன் விசனம்

புலிகள் இயகம் வன்னி மக்களை மனித கேடயங்களாக வைத்திருப்ப தையிட்டு ஐ.நா சபை, ஐக்கிய அமெ ரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளும் கவலை தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனி தாபிமான விவகாரங்களுக்கான தலை வர் ஜோன் ஹோம்ஸ் ஐ.நா பாதுகாப் புச்சபையில் இக்கருத்தை தெரிவித்தி ருந்தார். அத்தோடு யுத்தம் இடம் பெ ரும் பகுதிகளில் மனிதாபிமான பணிக ளை மேற்கொள்வதற்கு மனிதாபிமான பணியாளர்களை அனுமதிக்க வேண் டுமென்று கேட்டுக்கொண்டார்.

இப்போதுள்ள சூழ்நிலை மிகுந்த வேதனைக்குரியது என்றும் முதல் நடவடிக்கையாக புலிகள் மக்களை வெளியேற அனுமதிக்க வேண்டுமெ ன்றும் அவர் கேட்டிருக்கிறார். உத்தி யோகப்பற்ற பாதுகாப்புச்சபை கூட்டத் திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தி ருந்தார்.

இதேவேளை ஐக்கிய அமெரிக் காவின் மூத்த ஐ.நா பிரதிநிதியான ரோஸ்மேரி டிஹார்லோ மோசமடைந்து வரும் மனிதாபிமான நெருக்கடிகள் பற்றி தாம் அதிக அக்கறை கொண்டு ள்ளதாகவும் புலிகளின் நடவடிக்கை களை விமர்சித்ததோடு புலிகள் அமெ ரிக்காவில் தடை செய்யப்பட்ட இயக் கம் என்பதையும் குறிப்பிட்டிருந்தார். தாங்கள் புலிகள் மக்களை மனித கேடயங்களாக பாவிப்பதை கண்டிப்ப தாகவும், ஆயுதங்களை கீழே வைத்து விட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த் தைக்கு செல்லுமாறு கேட்டிருந்தார்.

இதேவேளை அரசாங்கமும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் ஷெல் தாக்குதல்களை நடத்துவதாக வும் குறிப்பிட்டிருந்தார். அமெரிக்கா இத்தகைய ஷெல் வீச்சுக்களை நிறு த்துமாறு கோரியிருந்ததாவும் ஆனால் கொழும்பு அவ்வாறு நிகழாது என்று வாக்குறுதி அளித்ததாகவும் தெரிவித் திருந்தார். ஆனால் அவ்வாறு வாக்குறு திகளை விட பெறுபேரே முக்கிய மானதெனவும் குறிப்பிட்டிருந்தார்.

பிரித்தானியாவுக்கான ஐநா பிரதி நிதி ஜோன் ஷாவர்ஸ மக்களை மனித கேடயங்களாக புலிகள் பாவிப்பதை குற்றஞ்சாடியதோடு கண்டனம் தெரி விப்பதாகவும் தெரிவித்திருந்தார். இரு தரப்பினருமே மனிதாபிமான சட்டங்க ளை மதித்து நடக்க வேண்டும் என்றும கனரக ஆயுதங்களை பாவிக்க கூடா தென்றும் ஒவ்வொரு நடவடிக்கையும் சிவிலியன்களை பாதுகாக்கும் நடவ டிக்கையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்

இது தொடர்பா இலங்கைக்கான ஐ.நா தூதுவர் பள்ளிகைகார சாதாரண மக்கள் வெளியேறுவதற்கு தாங்கள் 48 மணி நேர கால அவகாசத்தை வழங்கியிருந்ததாகவும் ஆனால் புலி கள் சாதாரண மக்களை தடுத்து வரு வதாகவும் தெரிவித்தார்.

மக்களை விடுவிப்பதற்கு எல்ரிரிஈ தயாராக இருக்குமானால் எமது அரசா ங்கம் அதற்குரிய வழி முறைகளை ஏற்படுத்தித் தர தயாராக இருப்பதாக தெரிவித்தார். அதேவேளை இந்த மோ தல்கள் முடிவுக்கு வருவதற்கு துரித மான வழி புலிகள் ஆயுதங்களை கீழே வைப்பதும் மக்கள் வெளியேறு வதும் எனறு அவர் தெரிவித்திருந்தார்.

(28-03-2009)

வன்னி பொது மக்களின் நிலை - ஐ.நா வின் துணை ஆணையாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் கவலை

கடந்த சில மாதங்களாக மனிதாபிமான நிலை மைகள் கணிசமான அளவுக்கு மோசமடைந்திருக்கிறது. மோதல்கள் தீவிரமடைந்திருக்கின்றனன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து ஏறக்குறைய எல்லா பொது மக்களும் இடம் பெயர்ந்திருக்கிறார்கள்.

சண்டை காரணமாக உயிரிழந்தவர்களின் எண் ணிக்கையில் பொது மக்களே அதிகம். என நம்புகி றோம். ஆனால் இந்த பகுதிகளுக்கு மனித நேய நிறு வனங்களும் ஊடகத்துறையினரும் செல்ல முடியாத காரணத்தினால் சுயாதீன மர்க்கங்கள் இல்லாத காரண த்தினால் எண்ணிக்கையை சரிபார்க்க முடியாது. ஆனால் தினசரி டசின் கணக்கானவர்கள் கொல்லப்படுகிறார்கள். மேலும் பலர் காயமடைகின்றார்கள் பொது மக்களின் நிலைமை பெரும் கவலைககுரியது. ஜனவரி மாத பிற்பகுதியில் உலக உணவு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த தரை மார்க்கமான வாகனப் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டது. இதன் காரணமாக அரச அதிபர்களும், சர்வதேச செஞ்சிலுவை சங்கமும் கடல் மார்க்கமாக ஓரளவு நிவாரணப் பொருட்களை வழங்கி வருகின்றன. உணவு, மருத்துவப் பொருட்கள், சுத்தமான நீர், கழிப்பிட வசதிகள், இருப்பிடம் என்பன மிக மிக குறைவாக உள்ளன. சண்டையினால் பாதிக்கப்படுபவர்களுக்கு மேலாக பட்டினி நோய் காரணமாக ஆபத்துக்களும் மிக வேகமாக அதிகரித்து வருகின்றன. இவ்வாறு அவர் தெரிவித்தார். (01-03-2009)

மனிதாபிமான சட்டம், சர்வதேச மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. நவநீதம்பிள்ளை

மனிதாபிமான சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமை கள் ஆகியவற்றை மீறும் யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் இலங்கை இராணுவத்தையும் விடுதலைப் புலிகளையும் குற்றஞ்சாட்ட வேண்டியுள்ளது. இரு தரப் பும் ஆயிரக்கணக்கான பொது மக்களை ஆபத்திற்குள்ளா க்கியுள்ளது. உடனடியாக யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்

ஜனவரி 20ம் திகதி முதல் 2800 பேர் கொல்லப்பட்டுள் ளார்கள். 7500 பேர் காயம் என நம்பத்தகுந்த வட்டாரத் தகவல். இவர்களில் அனேகர் யுத்தமற்ற பகுதிகளில் இருந்தவர்கள். இந்த மரணங்களில் நூற்றுக்கணக்கானவர் கள் சிறுவர்கள் அடங்குவர். அத்துடன் 1000 இற்கும் மேற பட்ட சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

இதுவரை காலமும் யுத்தத்தால் 70,000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

வன்னி பிராந்தியத்திற்குள் பின்வாங்கும் ஒவ்வொரு நில பகுதியிலும் 180,000 பொதுமக்கள வரை பொறிக்குள சிக்கியுள்ளார்கள் என ஐ.நா மதிப்பிடுகிறது. மரணம் 10,000 இற்கும் மேலிருக்கலாம். காயமடைந்தவர்களை கணக்கிட முடியாது

பொது மக்களை மனித கேடயங்களாக புலிகள் தொடர்ந்து வைத்திருப்பது தெரியவந்துள்ளது. அவர்களின் பிடியில் இருந்து வெளியேற முயலும் மக்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகிறார்கள். அத்துடன் கட்டாயத்தின் பேரில் சிறுவர்கள் உட்பட பொது மக்களை போராளிகளாக இணைத்துக் கொள்வதாகவும் நம்பப்படுகிறது. இவ்வாறு ஐ.நாவின் மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.(15-03-2009)

பாதுகாப்புவலய உயிர் இழப்புக்கள் - ஹிலாரி

அரச பாதுகாப்பு வலயத்தில் நிகழும் பெருமள விலான மரணங்கள் தொடர்பில் அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

யுத்த பிரதேசத்தில் உள்ள பாதுகாப்பு வலயத்தி லிருக்கும் பகுதியில் ஆயுதப தாக்குதல்களை நடத்தக் கூடாது.

மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டுள்ள பணியா ளர்கள் மக்களின் தேவைகளை கவனிக்க முழு அளவில் அனுமதிக்கப்பட வேண்டும்.

சர்வதேச மனிதாபிமான நிவாரண அமைப்புக்களை யுத்தப் பிரதேசத்திற்கும் இடம்பெயர்ந்து மக்கள் வசிக்கும் முகாம்களுக்கும் புகலிடங்களுக்கும் செலல முழு அளவில் அனுமதிக்க வேண்டும்.

பொது மக்கள் மீதான புலிகளின் நடவடிக்கைகளையும் கண்டித்தார்.அரசியல் தீர்வு ஒன்றுக்கு வழிகாணுமாறு கேட்டுள்ளார்.

வன்முறைகளையும், பயங்கரவாதத்தையும் ஆதரிக்காத தமிழ் மக்களுடன் இணைந்து பிரேரணையொன்றை முன்வைத்து அதிகார பரவலாக்கலை மேம் படுத்தும் நடவடிக்கையொன்றின் மூலமே நிலையான சமாதானத்தையும் ஒத்துப்போகும் தன்மையையும் எட்ட முடியும் என்று ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

தமிழ் முஸ்லீம்----

01ம் பக்கத் தொடர்ச்சி

வன்னியிலுள்ள மக்கள் தொகை 80,000 என்று ஏற்கனவே அரசு தரப்பில வெளியிட்ட தகவல் சரியானதல்ல என்றும் இரண்டு லட்சத்துக்கும் மேற் பட்ட மக்கள் அங்கு வாழலாம் என்று த.வி.கூ தலைவர் திரு. வீ. ஆனந்த சங்கரி குறிப்பிட்டிருந்தார்.

மூன்று லட்சம் மக்களுக்குரிய உணவு மற்றும் மருந்துகள் அனுப்பப் படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார். ஜனநாயக சூழல் ஒன்று வடக்கில் தோற்றுவிக்கப்படும் எனவும், அபிவிரு த்தி நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் விரைவில் வட க்கில் உள்ளூராட்சி தேர்தல்கள் நட த்தப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

யாழ் தேவி புகையிரத சேவையை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை யை திரு ராதாகிருஷ்ணன் பாராட்டிப் பேசினார். இதுவரை மதவாச்சிவரை மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் இப் புகை யிரத சேவையை வவுனியா வரை நீடிக்கப்பட வேண்டும் என்றும், முகாம் களில் வாழும் மக்கள் சமைத்து உண் ணும் வகையிலான வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்று திரு.. சித்தார்த்தன் கேட்டுக் கொண்டார். மேலும் வடக்கில் வவுனியா நகரச பைத் தேர்தலும் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. ஸ்ரீதரன் கருத்துத் தெரிவிக்கும் போது புலிகளின் பாசி சத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்ததோடு வன்முறை முற்று முழுதாக வடக்கு கிழக்கில் இல்லா தொழிக்கப்பட வேண்டும் என்றும் புலிகளின் சாயலில் தொடரும் வன்மு றை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் வெவ்வேறு குழுக் கள் அவ்வாறு செயற்படுகின்றன என் றும் ஒரு ஜனநாயக சூழல் வெவ்வேறு அரசியல் கட்சிகள் சுதந்திரமாக செய் ற்படுவதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் கடமை இதுவென்பதையும் சுட்டிக்காட்டி யிருந்தார்.

மேலும் இன சமூகங்கள் நெருங்கி வருவதற்காக ஐக்கியமாக வாழ்வதற் கான பொறிமுறைகள் கட்டமைப்புக் கள் உருவாக்கப்பட வேண்டும் அது பற்றி இந்தக் கூட்டத்தில் ஏதும் பேசப் பட இருக்கிறதா என்று வினா எழுப்பி னார்.

தொடர்ந்து ஜனாதிபதி அவர்கள் தொடரும் கூட்டங்களில் இது பற்றி பேசப்படும் என்று தெரிவித்திருந்தார்.

புலிகளின் ஊடக வக்கிரம்

புலிகளின் ஊடகங்கள் இப்போதெல்லாம் குரூரமாகவும் வக்கிரமாகவும் செயற்படுகின்றன.

அண்மையில் தமிழ்நெட் இணையத்தளம் காயமடைந்த நிலையில் ஒரு பெண்ணை ஆடையற்ற நிலையில் சித்தரித் திருந்தது.

இது வன்னியில் அவலப்படும் மக்களின் வேதனைகளையும், துயரங்களையும் புலி வியாபாரமாக்கும் யுக்தியாகும்.

அத்தோடு நிர்க்கதியான நிலையில் மரண அவஸ்தையில் இருக்கும் அந்தப் பெண்ணின் உரிமையை பறிப்பதும், அவ மானப்படுத்தும் ஒரு செயலாகும்.

இதேபோல் ஒரு பெண்ணின் கருப்பையை கிழித்து குழந் தையை செல் தாக்கியதாக வககிரமான முறையில் "தமிழ்வின்" என்ற புலிகளின் இணையத்தளம் ஒரு நிழல் படத்தை பிரசுரித் திருந்தது.

இது ஒருவித பாசிச மனநோயாகும்.

ஈழத்தமிழர்களுக்காக தீக்குளித்து உடலை கருக்கும் இளைஞர்களின் படங்களை பிரசுரிப்பதிலும் வன்னி மக்களின் அவலங்களை வக்கிரமான முறையில் நிழல்படம் அசையும் படங்களாக்குவதில் புலிகள் ஒரு குரூர இன்பத்தைக் காண் கிறார்கள்.

இந்தக் குரூர இணைய ஊடகங்களுக்கு மாற்றாக மனிதாபி மானத்தை வலியுறுத்தும் ஊடகங்கள் வீரியத்துடனும் விசால மாகவும் செயற்பட வேண்டும்.

குரல்

தமிழ் மக்களுக்கு நேர்மையான அதிகாரப்பகிர்வு வழங்க வேண்டும் - சிவசங்கர் மேனன்

இலங்கையில் நீண்ட காலமாக தொடர்ந்து வரும் இனரீதியான மோதல்களுக்கு நிரந்தர தீர்வு காணவேண்டுமென இலங்கை அரசாங்கம் கருதினால் சிறுபான்மை தமிழ் மக்களுக்கு நேர்மையான அதிகாரப் பரவலாக்கலை வழங்க வேண்டும்.

மீள் கட்டமைப்புடன் சிறுபான்மைத் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்மாணிப்பதாக உணரும் வகையில் அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய வகையான அரசியல் தீட்டத்தை முன்வைக்க வேண்டும் என இந்தியா கருதுகிறது.

அவ்வாறு நம்பகத்தன்மையுடன் கூடிய வகையில் அரசியல் தீர்வுத் திட்டத்தை இலங்கை அரசு முன் வைக்கத் தவறும் பட்சத்தில் மோதல்கள் காரணமாக மக்கள் இடம் பெயர்வது தனிமைப்படுத்தப்படுவது போன்ற நிலை மைகள் தொடரும் இவ்வாறு இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனன் வாஷிங்டனில் தெரிவித்தார். (13-03-2009)

உடனடி யுத்தநிறுத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் - ஐரோப்பிய பாராளுமன்றம்

இலங்கையில் யுத்தம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டு மென்று ஐரோப்பிய பாராளுமன்றம் விசேட தீர்மானமொன்றை நிறைவேற்றி யுள்ளது. மோதல்கள் நடைபெறும் பிரதேசங்களில் இருந்து மக்கள் வெளியேறு வதற்கு இந்த யுத்த நிறுத்தம் அவசியமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் இருந்து பொது மக்கள் சுதந்திரமாக வெளியேற தடை ஏற்படுவதாக குற்றம் சுமத்தி யுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் நிறுவப்பட்டுள்ள தற்காலிக இடைத்தங்கல் முகாம்கள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுவதாக சுட்டிக்காட்டி யுள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் யுத் தத்தில் ஈடுபட்டுவரும் சகல தரப்பினரும் செயற்பட வேண்டுமென கோரியுள்ளது. (13-03-2009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகியை கொன்றவர்கள்

திருகோணமலையில் ஆறு வயது சிறுமி வர்ஷா ஜுட் ரெஜி கடத்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது இந்த நாட்டின் மானிட நெஞ்சங்களை உருக்கியெடுத்திருக்கிறது. அந்த சின்னஞ் சிறு குழந்தையை படுகொலை செய்வதற்கான காட்டுமிராண்டித் தனம் எங்கிருந்து உதயமானது.

அதுவும் வீட்டுக்கு வந்து கணனி பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் இந்த இந்த படுகொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார். என்ற செய்தி மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. சமூகத்தின் இயக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது நம்பிக்கையே. இங்கு பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியரே சந்தேக பேர்வழி ஆகிவிட்டார்.

பாடசாலையில் இருந்து இந்தக் குழந்தையை அதன் தாயாருக்கு சுகயீனம் என்று கூறி ஆட்டோவில் அழைத்துச் சென்று படுகொலை செய்திருக்கிறார்கள். இதில் மேலும் பலர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என எண்ணும் போது எமது மனம் அதிர்ச்சியில் உறைந்து போகிறது.

குழந்தை வர்ஷாவிற்கு ஈடாக பத்து லட்சம் ரூபா பணத்தை கப்பமாக கேட்டிருந்தார்கள். குழந்தையின் வாயில் துணியை திணித்து வாயை பிளாஸ்திரி போட்டு ஒட்டி மூச்சுத் திணறியதால் குழந்தை உயிரிழந்ததாக ஊடகங்களில் செய்திகள் வந்தன.

இந்த குரூர மனம் எமது சமூகத்தில் எப்போது வந்தது? ஏவ்வாறு வந்தது? இதைச் செய்த அயோக்கியர்கள் இந்த உலகில் வாழ்வதற்கு எந்த உரிமையும் அற்றவர்கள்.

இந்த காட்டுமிராண்டித்தனத்தின அடித்தளமாக இருப்பது எமது சமூகத்தில் நிலவும் வன்முறை கலாச்சாரமே. 30வருடங்களாக நீடிக்கும் இவ் வன்முறை மிருக குணத்தை எமது சமூகத்தில் வளர்த்துள்ளது.

இத்தகைய காட்டுமிராண்டிகள் எம் மத்தியில் வாழ்கிறார்கள் என்று எண்ணும் போது வெட்க அவமான உணர்ச்சிகள் எம் மனதை பிடுங்கி தின்கின்றன.

ஒரு ஆறு வயது சிறுமி வாழ முடியாத தேசம் வாழ்ந்தென்ன?

அந்த சிறுமிக்கு பாதுகாப்பு இல்லையென்றால் அதற்கு நாம் வெட்கப்பட்டாக வேண்டும். இந்த நாட்டின் சட்டம் ஒழுங்குத்துறை மீது அதன் பொறுப்புணர்ச்சியின் மீது மிகப் பெரிய கேள்வி எழுகிறது.

சிறுவர் சிறுமியர் சமூகத்தின் செல்லப் பிள்ளைகள். கள்ளம் கபடமில்லா மனங்கள் அவை.

இந்த சின்னஞ்சிறு குருவிகளின் கழுத்தை திருகி வீதியில் வீசுபவர்கள் இருக்கும் வரை எமது சமூகம் உருப்படாது.

முதலில் கப்ப கலாச்சாரம், ஆட்கடத்தல், படுகொலைகள், அடாவடித்தனங்களுக்கு முடிவு கட்டுவதானால் துப்பாக்கிகளுடன் திரியும் துரைத்தன ரவுடிகளின் மக்கள் விரோத கும்பல்களின் ஆயுதங்கள் களையப்படல் வேண்டும்.

சட்டம் ஒழுங்கு எவ்வளவு தூரம பழுதுபட்டிருக்கிறது என்பதையும், செல்லரித்துப் போயிருக்கிறது என்பதையும் இந்த பாலகியின் படுகொலைச் சம்பவம் அவலமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

வன்முறை காட்டுமிராண்டி கலாசாரத்தை தட்டிக்கொடுத்து வளர்த்த ஊடகங்களும், இதற்குப் பொறுப்பு சொல்ல வேண்டும்.

நாம் நாகரீகமான மனித குலத்தின் அங்கத்தவர்கள்தானா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

இனி மேலும் இத்தகைய சம்பவங்கள் நிகழாமல் முற்றுப்புள்ளி இடுவதிலேயே நாம் மனிதர்கள் என்பதை நிலைநாட்ட முடியும்.

அகதித்தமிழன்

உள்ளத்தை நெகிழ வைக்கும் மனித பேரவலம்

மன்னாரிலிருந்து
ஞானதாஸ் சிவம்

வன்னிப பிரதேசத்தில் நடைபெற்று வரும் யுத்தத்தில் காயப்பட்டு வரும் மக்களால் வவுனியா, மன்னார் மருத்துவ மனைகள் நிறைந்து வழிகின்றன. சிறுவர், பெண்கள், வயோதிபர்கள் என எந்த பேதமும் இல்லாமல் அங்கவீனமாக்கப்பட்டவர்களின் அவலநிலை கண்டு மக்கள் மனம் வெதும்பி நிற்கின்றனர்.



கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக யுத்தப் பிடிக்குள் சிக்குண்டு பல சொல்லொணா துன்பங்களையும், சோக நிகழ்வுகளையும் கண்டு வந்த எம் மக்கள் மீது தற்போதைய யுத்தம் பெரும் சுமையாகவும் நரக வேதனையாகவும் அமைந்து விட்டது.

சுனாமி ஏற்படுத்திய துயரக் கதையை மிஞ்சி சோதனையான வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டுள்ள நிலை கண்டு கண்கலங்கி நிற்கின்றார்கள். எம் மக்கள்.

ஒரு புறம் யுத்தத்தில் உயிரிந்த உறவுக்காக ஒப்பாரி வைக்கும் உறவினர்கள், உடல் அங்கீனமாக்கப்பட்டு எதிர்காலம் இருளாக்கப்பட்ட நிலை, தந்தை, தாய், கணவன், மனைவி, பிள்ளை என்று தம் உறவுகளை யுத்தப் பிரதேசத்தில் தவிக்க விட்டு தாம் மட்டும் உயிர் தப்பியுள்ளோம் என்ற தவிப்பு, மனம் பேதலித்துப் போன நிலை, மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களின் யாரை பார்த்தாலும் சோகம், இழப்பு, அங்கவீனம், ஆழமான காயங்கள், உறவுகளின் உதவியில்லாமல் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு மக்கள் பீதியுடன் நாட்களை எண்ணும் கர்ப்பிணி பெண்கள், சிறார்கள், போசாக்கின்மை, உறவுகளின் இழப்பு, வெறித்த பார்வை இப்படியாக துயரத்தின் சாயலாக மருத்துவ மனைகள்.

எமது மக்கள், எமது உறவுகள் என்று மருத்துவ மனைகளுக்கு சென்று பார்த்துவிட்டு திரும்பும் பலரும் மரண வீட்டில் நின்று வருவது போன்ற மன நிலையிலேயே வெளியில் வருகின்றார்கள்.

இத்தனை சோகமான சூழலிலும் துணிச்சலாக சோர்வடையாது இரவு பகல் பாராது இன் முகத்துடன் மருத்துவ சேவையாற்றும் மருத்துவர்கள், தாதியர், பணியாளர்கள் தொண்டர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

அவர்களின் அரவணைப்பு நொந்துபோயுள்ள நோயாளிகளுக்கு மருந்தாக ஆறுதல் அளிக்கிறது. காயப்பட்டு வரும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். என்ற நோக்குடன் பலவிதமான உதவிகளையும் வழங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வ மத பெரியார்கள், பொது அமைப்புக்கள் அரசியல் கடசிகள், வர்தக சங்கங்கள், விளையாட்டு கழகங்கள், இன்னும் பல மக்கள் நலன் விரும்பிகள் மற்றும் படைத்தரப்பினர் என பல தரப்பட்டவர்களும் உதவுகிறார்கள்.

மனிதர்கள வாழ்வதற்காக எத்தனை அவலங்களை தாங்கி நிற்க வேண்டியிருக்கிறது. எத்தனை சோகங்களும், அவலங்களும் வேதனைகளும் [illegible]

இந்த மனங்களில் புதைந்து கிடக்கின்றன. உலகில் நாம் வாழ்வதற்காக கெஞ்ச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

வரலாற்றில் தவறாக மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறைகளும், தீர்மானங்களும் முடிவுகளும் எம் மக்களை இந்த நிலைக்கு தள்ளியது என்பதை இப்போதாவது புரிந்து கொள்கிறோமா? எமது இந்த அவல நிலைக்கு மற்றவர்கள் மீது மட்டும் பழிசுமத்த முடியாது. நாமும் தான் காரணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எமது சமூகம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும். எமது கருத்துக்கள் மட்டும் தான் சரியானவை என்று அடம் பிடிப்பதும், மமதை கொள்வதும் பாராதூரமான தவறுகளுக்கும் ஈடுகட்ட முடியாத சேதங்களுக்கும் வழிவகுத்து விடுகிறது. அதனைத்தான் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். மாற்று ஆலோசனைகள், கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும். ஜனநாயகத்தின் கூறுகள் எம் சமூக அரசியலில் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். அவை அழிந்து போனதன் விளைவையே நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

பகை உணர்வும், பழி தீர்க்கும் எண்ணமும் இல்லாது மனிதாபிமானம் எமது மனங்களில் கட்டியெழுப்பப்பட வேண்டும். கடந்து வந்த பாதையில் கற்றுக் கொண்டதை சிந்தனையில் கொண்டு செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

இழந்தவைகளுக்காக இடிந்து போ[illegible]

கால சந்ததிக்காக என்ன செய்ய வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டும். யுத்த இருட்டில் வெளிச்சத்தை தேட முடியாது என்பதற்காக மனித வாழ்வையே இருளாக்கிவிட முடியாது. எதிர்காலம் தொடர்பாக கனவுகளை கட்டியெழுப்பப்பட வேண்டும். சமூகத்துக்குள் இருக்கக் கூடிய சிந்தனையாளர்கள், கல்விமான்கள் என பலரும் சுதந்திரமாக செயலாற்றவும், கருத்துக்களை முன்வைக்கவும் இடைவெளி இருக்க வேண்டும்.

இடர்மிகுந்த, கெடுபிடியான, அமைதியற்ற, வேதனையான வாழ்க்கை

(தொடர்ச்சி 09ம் பக்கம்...)

வவுனியா-மன்னாரில் மக்களின் துயரங்கள்

வவுனியா வைத்தியசாலையில் வன்னியிலிருந்து கொண்டுவரப்பட்ட காயமடைந்த நோயாளிகளால் நிரம்பி வழிகிறது. நாளாந்தம் காயமடைந்தவர்கள் கொண்டுவரப்படுகிறார்கள். வைத்தியசாலை நிர்வாகமும், ஊழியர்களும, சர்வதேச தொண்டு நிறுவனங்களும் அல்லும் பகலும் அர்ப்பண உணர்வுடன் சேவையாற்றுகிறார்கள்.

குழந்தைகள் முதல் முதியோர், பெண்கள் என துயரத்தின் சாயல் கவிந்து கிடக்கிறது. வலியும், வேதனையும் குழந்தைகளின் அழுகுரலும் அங்கு நோயாளிகளை பார்வையிட செல்பவர்களை கண்கலங்க வைக்கிறது.

இந்த மக்களின் முகங்களில் எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகள் தகர்ந்துபோய் கிடக்கின்றன. அண்மையில் புளொட் அமைப்பின் தலைவர் திரு த. சித்தார்த்தன் அவர்களும் பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் திரு.தி.ஸ்ரீதரன் அவர்களும் மற்றும் இவ்விரு கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கு விஜயம் செய்து மக்கள் படும் துன்பத்தை நேரடியாக அவதானித்தனர்.

புளொட் அமைப்பின் இந்த நோயாளிகளுக்கு நாளாந்தம் பழங்களும், பிஸ்கட்டுக்களும் வழங்குகின்றனர். காயமடைந்தவர்களின் சில பிரத்தியேகமான தேவைகளுக்கும் தம்மாலான அளவில் உதவுகின்றனர்.

தவிர தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தலைவருமான திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகளும் மெனிக்பாம் அடங்கலாக முகாம்களுக்கு விஜயம் செய்து மக்களின் துன்பங்களையும், அவலங்களையும் நேரடியாக கேட்டறிந்தார். சில முகாம்களில் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பங்களையும் பெற்றுக்கொண்டார்.

மன்னார் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள காயமடைந்தவர்களின் நிலையை பார்வையிட்டார்.

மன்னார் ஆண்டகை ராயப்பு ஜோசப்பு அவர்களிடமும் நிலைமையை கேட்டறிந்தார். தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாக தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும் வேண்டுகோள் விடுத்தார்.

மன்னார் ஆண்டகையை பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ஸ்ரீதரன், மத்திய குழு உறுப்பினர்களான

(தொடர்ச்சி 09ம் பக்கம்...)

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அச்சகம் [illegible] Press [illegible] University Road Rattanapitiya Boralesgamuwa அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org